கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

1. இரணிய சர்வாதிகாரம்

பிரகலாத சரித்திரம் கூறும் இந்த இரணியன் வதைப் படலத்தின் முதலாவது செய்யுளிலேயே இரணியனது முழு வலிமையும் பிரஸ்தாபிக்கப் படுகிறது. இந்த அசுரனுடைய பலம் உடம்பின் 'மிருக' பலம் மட்டுமன்று; அறிவின் 'மிருக' பலத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

வலிமையின் ஒரு குவியல்!

இந்த அடிப்படை வலிமை முழுக்க முழுக்க அறிவு வலிமையுமன்று. வர பலமும் கூட.

உலக மெல்லாம் பரந்து கிடக்கும் வலிமை யெல்லாம் ஒரு சேரக் குவிந்து விட்டதோ என்று சொல்லும்படி வருகிறான் இரணியன், நம் முன் ஏதோ ஒரு கனவில் தோன்றுவதுபோல.

வேதம் கண்ணிய
  பொருளெலாம் விரிஞ்சனே
    ஈந்தான்;
போதம் கண்ணிய
  வரமெலாம் தரக்கொண்டு
    போந்தான்;
காதும் கண்ணுதல்
  மாலயன் கடைமுறை
    காணாப்
பூதம் கண்ணிய
  வலியெலாம் ஒருதனி
    பொறுத்தான்.

[வேதம் கண்ணிய பொருளெலாம் – வேதப் பொருள்கள் எல்லாவற்றையும். கண்ணிய – குறித்த. விரிஞ்சனே – பிரமதேவனே. ஈந்தான் – (இங்கே) கற்பித்துக் கொடுத்தான். போதம் கண்ணிய – தன் அறிவினால் குறித்த. தரக் கொண்டு போந்தான் – அந்தப் பிரமனே தனக்குக் கொடுக்கப் பெற்றுக் கொண்டு வந்தான். காதும் – அழிக்கிற. கண்ணுதல் – நெற்றிக் கண்ணனான சிவபெருமான். மால் – திருமால். அயன் – பிரமன். கடைமுறை – முடிவெல்லை. காணா வலி – காண வொண்ணாத வலிமை. பூதம் கண்ணிய வலி – பூதங்களிடம் பொருந்திய வலிமை. ஒரு தனி – தான் ஒருவனே. பொறுத்தான் – தாங்குபவனானான்.]

வேதம் அறிவின் மூல பொக்கிஷமல்லவா! வேதம் தொடக்கமான அறிவுப் பொருளைக் கற்றுக் கொண்டான், குரு மூலம்தான். இரணியன் கல்வியும் மூலமில்லாத கல்வியன்று. பிரமனையே குருவாகக் கொண்டு கற்றுக் கொள்கிறான். குருவுக்கு மிஞ்சிய சிடனாகி அந்தப் பிரமனிலும் மிக்க அறிவாளனாகி விட்டான், தீபத்தில் பொருத்திய திவட்டி போல. இத்தகைய அறிவு 'போதம்' என்று இங்கே குறிக்கப்படுகிறது.

தன் போதத்திற்குத் தோன்றியபடி வரங்களை யெல்லாம் அரும்பெருந் தவங்கிடந்து தண்டிக் கொண்டான், பிரமதேவனிடத்தி லிருந்தே.

இத்தகைய வலிமை, இரணியனைப் பிரமன் உள்ளிட்ட மும்மூர்த்திகளுக்கும் மேலான ஓர் அதிசய நிலையில் வைத்து விடுகிறதாம்.

இந்த நிலையை இன்னும் பிரமிக்கத் தக்கவாறு இரண்டாம் செய்யுள் வற் புறுத்துகிறது :

எற்றை நாளினும்
உளன்என்னும் இறைவனும்
அயனும்
கற்றை யஞ்சடைக்
கடவுளும்காத்(து)அளித்(து)
அழிக்கும்
ஒற்றை அண்டத்தின்
அளவினே, அதன்புறத்(து)
உலவா
மற்றை அண்டத்தும்
தன்பெய ரேசொல
வாழ்ந்தான்.

[எற்றை நாளினும்–எக்காலத்திலும். உளன் எனும் இறைவன் – இருக்கிறு னென்று சொல்லப்படுகிற திருமாலும். கற்றையஞ்சடைக் கடவுளும் – தொகுதி யான சடையை யுடைய சிவபெருமா னும். ஒற்றை அண்டத்தின் அளவினே – இந்த ஓர் அண்டகோளத்தில் மாத்தி ரமோ. அதன்புறத்து – இந்த அண்டத் திற்கு வெளியிலுள்ள. உலவா–கணக்கிட முடியாத. மற்றை அண்டத்தும் – மற்றை அண்ட கோளங்களிலும். தன் பெயரே சொல – தன் பெயரையே எல் லாரும் சொல்லும்படி.]

மும்மூர்த்திகளும் இந்த அண்டத் துடன் வேறு அண்டங்களையும் காத்து அளித்து-அழிக்கிறுர்க ளல்லவா ? இரணி யனும் இம் மூர்த்திகளின் முத்தொழில் நடைபெறும் அண்டங்களில் எல்லாம் எதிர்த்தொழில் செய்து பேர் பெற்றி ருந்தானும், வல்லாள கண்டன் என்று.

வல்லவர் மூவர்க்கும் ஒரு வல்லவனாகத் திகழ்ந்த இரணியனை அவனுடைய பொழுது போக்குகளிலும் 'இதோ பாருங்கள்' என்று காட்டி நம்மைப் பிரமிக்கச் செய்கிறுன் கவிஞன். கடமை யாகச் செய்யும் தொழிலைக் காட்டி லும் பொழுது போக்கு ஒருவனைச் சரி யாகக் காட்டக்கூடும் என்பர்.

இரணியன் பொழுதுபோக்கு

இதோ பாருங்கள் இரண்டு பொழுது போக்குகள் :

பாழி வன்றடந்–
திசைசுமந்(து) ஓங்கிய
பணைக்கைப்
பூழை வன்கரி
இரண்(டு)இரு கைக்கொடு
பொருத்தும் ;
ஆழம் காணுதற்(கு)
அரியவாய் அகன்றபே–
ராழி
ஏழும் தன்இரு
தாள்அள(வு)எனக்கட‍ந்(து)
ஏறும்.

[பாழி – விசாலமான. வன்றடந் திசை – வலிய பெரிய திசைகளை.



பணைக் கைப் பூழை வன்கரி – பருத்த உள்தொளையுள்ள துதிக் கையை உடைய வலிய யானை கள். இரு கைக்கொடு பொருத் தும் – தன் இரண்டு கைகளால் இழுத்து முட்டவிட்டு வேடிக்கை பார்ப்பான். அகன்ற பேராழி – பரந்த பெரிய சமுத் திரம். தாள் அளவு எனக் கடந்து – தன் இரண்டு கால்களின் அளவே ஆகக் கடந்து. ஏறும் – அப்பால் போவான்.]

ஆட்டுக் கடாக்களைச் சண்டைக்கு விட்டு வேடிக்கை பார்ப்பதுண்டல்லவா? இரணியனே திக்கஜங்களில் இரண்டைப் பொருத்தி விளையாடுகிறுன், தன் பெரு வலிக் கிணங்க.

இன்பப் படகுகளில் கடலில் செல் வது இன்று ஒரு பொழுது போக்குல்

லவா? இரணியனுக்கோ கடல் கடக்கக் கப்பலும் தேவை யில்லை; படகும் தேவை யில்லை. நீந்த வேண்டிய அவசியம் கூட இல்லையாம்.

மட மட வென்று ஏழு கடல்களிலும் இறங்கி நடக்க வேண்டியது தான். கடல் நீர் கழுத்தளவும் இல்லை; இடுப்பளவு கூட வரவில்லை.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்பர். இரணியனோ இப்படியெல்லாம் பொழுது போக்கி வாழத் துணிந்தவன்.

ஒருவனை 'உயர்ந்தவன்' என்றதும் 'பனை போல் அவ்வளவு உயர்ந்தவனா?' என்று விகடமாய்க் கேட்டானாம் ஒருவன். இங்கே கவிஞன் இரணியனது வடிவின் உயரத்தையும் வலிமையின் உயர்வையும் பொழுது போக்குடன் சேர்த்துக் காட்டுகிறான், கடலும் காலளவு என்பதாக.

சுகானுபவம்

இரணியனுடைய பொழுது போக்குடன் சுகானுபவத்தையும் அடுத்த பாட்டு வற்புறுத்துகிறது:

வண்டல் தெண்டிரை
ஆற்றுநீர் சிலவென்று
மருவான்;

கொண்டல் கொண்டநீர்
குளிர்ப்பில என்(று)அவை
குடையான்:

பண்டைத் தெண்டிரைப்
பரவைநீர் உவரென்று
படியான்;

அண்டத் தைப்பொதுத்(து)
அப்புறத்(து) அப்பினால்
ஆடும்.

[வண்டல் தெண்டிரை ஆற்று நீர் – வண்டலிட்டோடுவதும், மேலே தெளிவான அலைகளை யுடையதுமான ஆறுகள். சிலவென்று – (இங்கே) சிறிய என்று. மருவான் – அருகிலும் செல்லான். கொண்டல் – காளமேகம். குளிர்ப்பு இல என்று – போதுமான குளிர்ச்சி இல்லாதன என்று. அவை குடையான் – அவ்வகை நீர்களிலும் முழுகான். பண்டை – பழமையான. பரவை – கடல். உவர் என்று படியான் – உப்பு என்று நீராடான். அண்டத்தைப் பொதுத்து – அண்டகோளத்தை ஒரு புறம் பொத்தல் செய்து. அப்புறத்து அப்பினால் – அதற்கு அப்பாலுள்ள நீரைக் கொண்டு. ஆடும் – நீராடுவான்.]

'பொருள், போகம், வேகம்' என்னும் மும்மூர்த்திகளுக்கு ஆளாகியிருக்கும் இன்றைய உலகத்திலே, அதி



காலையில் குமரி நீராடுவதும், காலைச் சிற்றுண்டியைத் தூரத்திலுள்ள ஒரு பெரு நகரில் உட்கொள்வதும், இன்னும் தொலைவிலுள்ள ஒரு சோலையில் பகற்பொழுதைக் கழிப்பதும், இராப்பொழுதை மேக மண்டலத்திற்கு அப்பால் பறந்து போகும் ஒரு விமானத்தில் கழிப்பதும் சாத்தியமாகி யிருக்கிறதல்லவா !

பொன் மயமான இரணியனது போக வாழ்க்கையையும் வேக வாழ்க்கையையும் கற்பனை எவ்வளவு தூரம் தூக்கிக் காட்டுகிறது பாருங்கள் :

மரபின் மாப்பெரும்
புறக்கடல் மஞ்சனம்
மருவி,
அரவின் நாட்டிடை
மகளிரொ(டு) இன்னமு(து)
அருந்திப்,
பரவும் இந்திரன்
பதியிடைப் பகற்பொழு(து)
அகற்றி,
இரவின் ஓலக்கம்
நான்முகன் உலகத்துள்
இருக்கும்.

[மரபின் – தான் முறையாகச் செய்து வந்ததற்கு இணங்க. மாப்பெரும் புறக்கடல் – அண்டத்தின் உள்ளே யுள்ள ஏழு கடல்களைக் காட்டிலும் பெரியதும், இந்த அண்டத்தின் புறத்திலே அல்லது வெளியே உள்ளதுமாகப் பௌராணிகர் கற்பனை செய்திருக்கும் புறக் கடல். மஞ்சனம் மருவி – நீராடி. அரவின் நாட்டிடை – நாகலோகமாகிய பாதாளத்திலே. மகளிர் – (இங்கே) நாக கன்னிகையர். பரவும் – இரணியனை தன்னையே துதித்துக் கொண்டிருக்கிற. பதி – நகரமாகிய அமராவதி. பதியிடை – (இங்கே) அப்பதியைச் சார்ந்த கற்பகச் சோலையில். இரவின் – இரவிலே. ஓலக்கம் இருக்கும் – கொலு விற்றிருப்பான்.]

இத்தகைய போக வாழ்க்கை மட்டுமல்ல இரணியன் வாழ்க்கை ; மிகவும் சுறுசுறுப்பான வேக வாழ்க்கையும் கூட.

பெரும்புறக் கடலில் நீராடிப் பாதாளத்தில் உணவு அருந்திப் பகற்பொழுதில் தேவேந்திரனுடைய கற்பகச் சோலையில் இளைப்பாறி, இராக் கொலுவைப் பிரமலோகத்தில் ஏற்படுத்திக் கொண்ட அசுர சக்ரவர்த்தி, தன் ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டுமல்லவா ?

அதிகாரப் பிடிப்பு

சக்ரவர்த்தியும் சர்வாதிகாரியுமான இரணியன் தான் எல்லாருக்கும் மேலாக எட்ட முடியாத ஒரு மலைச் சிகரத்தில் ஏறியிருப்பது போல் அரசு வீற்றிருக்க வேண்டியது தான். ஆனால் இந்த உச்ச நிலை மட்டும் போதாது. தனக்குக் கீழே பதவி வகிப்போரின் அதிகாரங்களிலும் பிடிப்பு வேண்டுமல்லவா ?

இத்தகைய பிடிப்பும் மகோன்னத நிலையும் இரணியனுக்கு உண்டு :

சாரும் மானத்தில்
சந்திரன் தனிப்பதம்
சரிக்கும் ;
தேரின் மேலினின்(று)
இரவிதன் பெரும்பதம்
செலுத்தும் ;
பேர்வில் எண்திசைக்
காவலர் கருமமும்
பிடிக்கும் ;
மேரு மால்வரை
உச்சிமேல் அரசுவிற்–
றிருக்கும்.

[சாரும் மானத்தில் –(சந்திரன்) ஏறிச் செல்லும் விமானத்தில். தனிப்பதம் சரிக்கும் – தான் ஏறிக்கொண்டு அந்த ஒப்பில்லாத பதவியில் சஞ்சரிப்பான் ; அதாவது, அந்த அதிகாரத்தைச் செலுத்திப் பார்ப்பான். இரவி – சூரியன். பேர்வில்–மாறுதல் இல்லாத, எண் திசைக் காவலர் – அஷ்ட திக்குப் பாலகர்களின். கருமமும் பிடிக்கும் – தொழில்களையும் நடத்திப் பார்ப்பான். மேரு மால்வரை– பெரிய மேருமலை.]

வெண்ணிலவு பொழியும் சந்திரன் விமானத்திலும். சூரியன் ஒளிமயமான தேரிலும் சஞ்சரித்துத் தத்தம் அதிகாரங்களைச் செலுத்துகிறார்களாம். இரணியன் பளிச் சென்று சந்திர சூரியர்களைத் தத்தம் வாகனங்களிலிருந்து இறங்கச் செய்து தானே அந்த அதிகாரங்களையும் அப்படி வகித்துப் பார்ப்பானாம். திடீரென்று திக்குப் பாலகர்களின் அதிகாரத்தையும் கைக்கொண்டு செலுத்துவான்.

இப்படி யெல்லாம் இரணிய சக்கரவர்த்தி சர்வாதிகாரம் புரிந்து வருகிறான்.

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

2. இரணிய சொரூபம்

பூமி நம்மவருக்கு உறையுளாகிய நிலம் மட்டுமன்று. மக்களை மடிமேல் வைத்தும், மார் மேலும் தோள் மேலும் அணைத்துக் கொண்டும் சீராட்டுகிற தாயான பூமிதேவியும் தான்.

நீர், நீர் மட்டு மன்று. அங்கே ஒரு தேவன்—நீர்க் கடவுள்—நீராய் உருகும் நீர்மையனாய்த் தொழில் செய்கிறான், தொண்டாற்றுகிறான். நிலமும் நீரும் கண்ணுக்குத் தெரியும் பூதங்கள்.

கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் தொழிலாற்றுவது தீ. தீ எரியும் போதும் ஒரு கடவுள்—நெருப்புக் கடவுள்—கனன்று தன் ஏழு நாக்கையும் நீட்டிய வண்ணம் தன் கருமத்தைப் புரிகின்றான். தீக்கடவுள் வாயிலாகக், கட்புலனாகாத கடவுளருலகத்துடன் தொடர்பு கொண்டனர் நம் முன்னோர்.

கண்ணுக்குத் தெரியாதது காற்று. காற்றிலும் ஒரு தேவதை வீற்றிருந்து மந்த மாருதத்திலே தவழ்கிறதாம்; சண்ட மாருதத்திலே சினந்து சீறுகிறதாம், சுழல் காற்றிலே சுழித்துப் புழுதிப் படுத்துகிறதாம். மூச்சுக் காற்றாகி உயிர்த்தீயைத் தூண்டி ஜொலிக்கவும் செய்கிறான் காற்றுதேவன்.

ஆகாயத்திலும் தேவதைகள். ஆம், எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிக் கிடக்கிற ஆகாயத்திலும் தான். ஆகாய வீதி யெங்கும் தேவர்களின் சஞ்சாரம்; தேவ தூதர்களின் ஓட்டம்; தேவ மாதர்களின் ஆடல் பாடல்கள்!

இவை கவிஞர் கற்பனை மட்டுமல்ல; புராணங்களின் புனை கதை மட்டுமல்ல, இந்து சமயக் கோட்பாடும் தான். இந்து அனுபூதிக் கலைஞர் இத்தகைய தெய்வ உண்மையைக் கண்டு கூறியிருப்பதாகக் கருதுவோரும் உண்டு.

இந்து சமயம் பல தெய்வ வழிபாடு என்று சிலர் கூறுவதற்கு மேலே சொன்ன கோட்பாடும் ஒரு காரணமாகும். மதமே, தெய்வ வழிபாடே, மூட நம்பிக்கைதான் என்று முழக்குவோர், நிலத்திலும் நீரிலும் கனலிலும் காற்றிலும் தெய்வங்கள் உண்டு என்னும் கொள்கை குறித்து ஒரு ராவணச் சிரிப்பே சிரித்துவிடவும் கூடும். இல்லையா?

உத்தியோக மாற்றமா?

வாசகர்கள் இந்தக் கற்பனை நயத்தையாவது ரஸித்துப் பார்க்க வேண்டும்:

நிலனும் நீரும் வெங்-
கனலொடு காலுமாய்
நிமிர்ந்த
தலனுள் நீடிய
அவற்றின் அத் தலைவரை
மாற்றி,
உலவும் காற்றொடு
கடவுளர் பிறருமாய்,
உலகின்
வலியும் செய்கையும்
வருணன் தன் கருமமும்
ஆற்றும்.

[வெங்கனலொடு-வெப்பமான நெருப்போடு. காலுமாய் - காற்றுமாகி. தலனுள் - உலகத்தில். நீடிய அவற்றின் - நெடுங்காலமாகவுள்ள அந்தப் பூதங்க



ளின். தலைவரை – தலைவராக உரிய அதிதேவதைகளை. மாற்றி –ஒருவர் பதவிக்கு மற்றொருவரை மாறச் செய்து. வலியும் – வலிமையையும். வருணன் தன் கருமமும் – வருணனது செய்கையையும். ஆற்றும் – தானே செய்வான்.]

இரணியன், நீர்க் கடவுளை நெருப்புக் கடவுளாக வேலை பார்க்க வேண்டுமென்று ஓர் உத்தரவு பிறப்பிப்பான். பூமி தேவியைக் கண்ணுக்குத் தெரியாத காற்றாக வீசிக் கொண்டிருக்க வேண்டுமென்று கட்டளை யிடுவான்.

சூரியனைக் 'குளிர்ந்த சந்திரனாகி நிலவைப் பொழிவாய்!' என்பான். சந்திரனைக் கோபமாகச் சூரிய ரதத்திலோடி வெப்பம் கொடுக்க வேண்டுமென்று பயமுறுத்துவான். இப்படியெல்லாம் உத்தியோக மாற்றங்கள் இரணிய ராஜ்யத்திலே!

உத்தியோகம் மாற்றவும் செய்வான்; உத்தியோகம் ஆற்றவும் செய்வான் இந்தச் சர்வாதிகாரி. பொதுவாக, பெரிய பதவியிலுள்ளவர்கள் சிறிய உத்தியோகங்களை வகிக்க இயலாதவரா யிருக்கக் கூடுமல்லவா? இரணியனோ எந்த உத்தியோகத்தையும் வகிக்கக் கூடிய தனிப் பேராற்றல் வாய்ந்தவன்.

காற்றாக உலாவி எந்த இரகசியத்தையும் அறிந்து கொள்வான். கனலாகச் சீறிக் காய்வான். மழையாகவும் தன் அதிகாரத்தைப் பொழிந்து விடுவானும்.

இரணிய நாமாவளி

எல்லாரும் 'தன் பெயரே சொல வாழ்ந்தான்' என்று ஏற்கெனவே இரணியனை அறிமுகப் படுத்தியிருக்கிறான் கவி

ஞன். இத்தகைய இரணிய நாமம் இறைவனுடைய திரு நாமங்களைப் போல் ஓதப்படுகின்றனவாம், உலகமெங்கும்.

பொதுவாகத் திருமாலின் நாமதேயங்களையோ சிவபெருமானது திருப்பெயர்களையோ நம்மவர் உச்சரிப்பது வழக்கம். இரணியன் தலையெடுத்த பின் எங்கும் இரணியனுடைய நாமவாளிதான். சிவ விஷ்ணு நாமங்கள் மறைந்து போகின்றனவாம்.

இத்தகைய சர்வாதிகாரி ராவணன் முதலானவர்களைப்போல் வேள்விகளைத் தடுப்பதற்கு மாருக, தேவர்களை உத்தேசித்துக் கொடுக்கும் அவிர்ப்பாகங்களையெல்லாம் தானே தின்று விடுவானும். எந்த எந்தத் தெய்வத்தை உத்தேசித்து வழிபாடு செலுத்தினுலும், எல்லா வழிபாடுகளும் திருமாலை அடையும் என்று வைணவர்களும், சிவபெருமானை அடையு



மென்று சைவர்களும் சொல்கிருர்களல்லவா? அந்த நிலையிலும் தான் இருப்பது போலக் காட்டிக் கொள்கிருனும் இரணியன்.

இந்தச் சர்வாதிகார நிலையை வெளியிடும் செய்யுள்:

தாம ரைக்கண்ணன்
  தழற்கணன் பேரிவை
    தவிர,
நாமம் தன்னதே
  உலகங்கள் யாவையும்
    நவிலத்,
தூம வெங்கனல்
  அந்தணர் முதலினர்
    சொரிந்த
ஓம வேள்வியின்
  இமையவர் பேறெலாம்
    உண்ணும்.

[தாமரைக் கண்ணன் – மகாவிஷ்ணு. தழல் கணன் – நெருப்புக் கண்ணனுகிய சிவ பெருமான். பேர் இவை – இவர்களுடைய இந்தப் பெயர்கள். தவிர – தவிர்ந்து போகுமாறு; நீங்கும்படி. நாமம் தன்னதே – தனது பெயரையே. நவில – சொல்ல. தூம வெங்கனல் – புகையுள்ள வெப்பமான நெருப்பில். அந்தணர் முதலினர் – முனிவர் முதலியோர். ஓம வேள்வியின் – ஓமத்துடன் செய்யப்படும் யாகங்களில். இமையவர் பேறெலாம் – தேவர்கள் பெறுவதற்கு உரிய அவிர்ப்பாகங்களையெல்லாம்.]

பாத பூஜை

இந்தச் சர்வாதிகாரி தன் நிலையைத் தேவதேவனது நிலைக்கே உயர்த்தி விடுகிருனும்:

காவல் காட்டுதல்
  துடைத்தல் என்றித்
    தொழில் கடவ
மூவ ரும்மவை
  முடிக்கிலர் பிடிக்கிலர்
    முறைமை;
ஏவர் மற்றவர்?
  யோகியர் உறுபதம்
    இழந்தார்;
தேவ ரும்மவன்
  தாள்அலால் அருச்சனை
    செய்யார்.

[காவல் – பாதுகாத்தல். காட்டுதல் – படைத்தல். துடைத்தல் – அழித்தல். என்றித் தொழில் – என்ற இத்தொழில்களுக்கு. கடவ மூவரும் – உரிய மும்மூர்த்திகளும். அவை – அத் தொழில்களை. முடிக்கிலர் – செய்து முடிக்க மாட்டாதவர்களாய். பிடிக்கிலர்

முறைமை – அந்தத் தொழில் முறை களைக் கை விடுவாராயினர். ஏவர் மற்ற வர் – வேறு எவர்தாம் தம் தமக்கு உரிய தொழிலை முறையாக முடிக்க வல்லவர். உறுபதம் – தம் யோக முயற்சியால் பெறும் பதவிகளை. தாள் – பாதங்கள்.]

மும்மூர்த்திகளும் தத்தம் தொழிலை முறையாக மேற் கொண்டு செலுத்த முடியவில்லையாம் இரணியன் ஆட்சியில். படைப்புக் கடவுளின் படைப்பையே மாற்றிப் படைக்கவும் தொடங்கி விடுகிறான்.

காவல்–கடவுளான திருமாலின் தொழிலைப் போக்கிச் சும்மா உறங்கிக் கொண்டிருக்கும்படி விட்டுவிட்டு, தன் இஷ்டப் படியே ரட்சிக்கவும் பட்சிக்கவும் தொடங்கி விடுகிறான் இந்த அசுர ஸர்வாதிகாரி. இவன் ஆட்சியில் காத்தலை விடத் துடைத்தல் வேலை தானே மும்முரமாக நடை பெற வேண்டியிருக்கிறது!

அவ்வளவு துடைத்தல் வேலையையும் சிவபெருமானே செய்து கை ஓய்ந்து போக வேண்டாம் என்பதாகவும் இரணியன் நினைக்கிறான். 'நீயும் சிறிது கையாறலாம்; ஆருயிர் துடைக்கும் அந்த வேலையை நாமே கவனித்துக் கொள்வோம்!' என்று சொல்லி ஏற்பாடு செய்து விட்டது போல் திகழ்கிறதாம் இரணியனது கொலைத் தொழில் மாட்சி.

இப்படி மூவரும் ஓய்ந்து கிடக்கும் போது தேவர்கள் இரணியனுக்குப் பாத பூஜை செய்யாமல் வேறு என்ன தான் செய்ய முடியும்?

யோக முயற்சி உள்ளிட்ட ஒரு வகை முயற்சியும் பயன் படுவதற்கு வழியில்லையாம் இந்தச் சர்வாதிகாரத்தின் கீழ். பாத பூஜை யொன்றே பயன் தரும் முயற்சி!

கல்வியிலும் சர்வாதிகாரம்

இவ்வளவு சர்வாதிகாரமும் நிலை பெறுவதற்காகக் கல்வி முறையைத் திருத்தி அமைத்து விடுகிறான் இரணியன். ஆம்; இந்த மகாராஜ்யத்திலுள்ள குருகுலக் கல்வி முறையின் அடிப்படையே மாற்றி அமைக்கப்படுகிறது.

பிரமனை உள்ளிட்ட பிராமணர்களெல்லாம் இரணியனது வெற்றிச் சரித்திரத்தையே சரித்திர பாடமாக, இதிகாச புராணங்களுக்குப் பதில், படிக்கத் தொடங்கி விட்டார்களாம்.

இதன் பலனையும் அதிசயமாய், அழுத்தமாய்ச் சொல்லித் தீர்த்து விடுகிறான் கவிஞன்:

மருக்கொள் தாமரை
  நான்முகன் முதலிய
    மறையோர்
குருக்களோடுகற்–
  றோதுவ(து) அவன்பெருங்
    கொற்றம்!
சுருக்கில் நான்மறை
  தொன்றுதொட்(டு)
        உரைதொறும்
    தோன்று(து)
இருக்கும் தெய்வமும்
  'இரணிய னேநம!'
    என்னும்!

[மருக்கொள்–வாசனையைக் கொண்ட. அவன் பெருங் கொற்றம்–அந்த இரணியனது பெரிய வெற்றி வரலாறேயாகும். சுருக்கில்–சுருக்கமாய்க் கூறுவோமேயானால். நான்மறை–நாலு வேதங்களும். உரைதொறும் தோன்று(து)–தமது சொற்களில் எல்லாம் வெளிப்படாது மறைந்து.]

வேதங்கள் தங்கள் மந்திரச் சொற்கள் தோறும் மறைந்திருக்கிற பரம் பொருளைத் துதிக்கின்றன என்பது அறிஞர் கொள்கை. அந்தப் பொருளை 'நாராயணன்' என்பர் வைணவர்; 'சிவன்' என்பர் சைவர். 'இரணியனே நம' என்று முழங்குகின்றனவாம் வேத மந்திரங்கள் இப்போது.

அப்படி முழங்குகிறார்கள் ராஜபக்த வேதியர்கள் என்பது குறிப்பு. அவ்வளவு பெரும் பயபக்தி ஆஸ்திகரும் நாஸ்திகருமான மக்களுக்கெல்லாம், ஸர்வாதிகார பர தேவதையிடம்!

தண்டாயுதம் தேடுதல்

இந்தப் பரதேவதை தன்னுடைய 'தண்ட நீதி'யாகிய அரசியலுக்கு அறிகுறியாக ஒரு தண்டாயுதத்தைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறான். அது இரணியனது வெற்றித் தோள்களின் வன்மைக்கும் செருக்கின் மாட்சிக்கும் ஏற்றதாக அமைய வேண்டுமல்லவா?

தேவாசுரர் கடல் கடையத் தேடி எடுத்து வந்த மத்தாகிய மந்தர மலையையே தனக்கு உரிய தண்டாயுதமாக்கிக் கொள்ளலாமென்று எடுத்துப் பார்க்கிறான். 'அற்பமானது' என்று எறிந்து விடுகிறான்.



கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

3. தந்தையும் மகனும்

(வார்ப்பில் குறை)

இரணியனுக்குக் குருவாக இருந்து வேதப் பொருள் உணர்த்திய பிரமனுக்கும், 'இரணியனே நம' என்று பாத பூஜை செய்யும் கதி ஏற்பட்டிருக்கிறது. ஆம்; இது இரணிய ராஜ்யம்.

அதிகார வைபவம்

இந்த இரணியன் சிங்காதனத்திலிருந்தபடியே இத்தகைய பூஜைக்காக நீட்டிய தன் பாதங்களை ஊன்றி வைத்தால், ஆதிசேஷனும் 'ஆ, விதியே!' என்று அயர்ந்து போவானாம். சிங்காதனத்திலிருந்து இந்த அசுரசிங்கம் எழுந்து நிமிர்வானானால், 'அண்டகோளத்தின் மேல் முகடு முடியில் படுமோ?' எனத் தோன்றுமாம். அவ்வளவு உயர்த்தி; அவ்வளவு காம்பீர்யம்; அப்படி மின் வெட்டும் மணி மகுடம்!

உலாவத் தொடங்கி விட்டால், அந்த நடை வேகத்திலே பஞ்ச பூதங்களும் பஞ்சுபோலக் கூடவே நிலை பெயர்ந்து ஓடுகின்றனவோ எனத் தோன்றுமாம்:

மயர்வில் மன்னவன்
சேவடி மண்ணிடை
வைப்பின்,
அயரும் வாள்எயிற் –
றாயிரம் நனந்தலை;
அனந்தன்;
உயரு மேல்,அண்ட
முகடுதன் முடியுற
உயரும்;
பெயரு மேல்,நெடும்
பூதங்கள் ஐந்தொடும்
பெயரும்,

[மயர்வில் – சோர்வே இல்லாத மன்னவன் – (இங்கே) இரணியன். சேவடி – தன் சிவந்த அடிகளை. மண்ணிடை – மண்ணில்; பூமியில். வைப்பின் – ஊன்றி வைப்பானானால். அயரும் – அயர்வான்; தளர்வான். வாள் எயிறு – கூரிய பற்கள். நனந்தலை – அகன்ற தலைகள். அனந்தன் – ஆதிசேஷன். உயருமேல் – எழுந்து நிமிர்ந்து நிற்பானானால். அண்ட முகடு – அண்டகோளத்தின் மேல் முகடு. முடியுற – தன் முடி தொட. உயரும் – உயர்வான். பெயருமேல் – இடம் விட்டுச் சஞ்சரிப்பானானால். நெடும் பூதங்கள் ஐந்தொடும் – ஐம்பெரும் பூதங்களோடும். பெயரும – சஞ்சரிப்பான்; நடப்பான்.]

மரணத்தை வெல்லும் முயற்சி

எத்தகைய ஸர்வாதிகாரிக்கும் மரண பயம் என்ற அந்தத் தனிப் பெரும் பயம் உண்டல்லவா? பக்தன் தானே 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்; நமனை அஞ்சோம்!' என்று தலைநிமிர்ந்து நிற்க வல்லவன்!

இரணிய ஸர்வாதிகாரி பக்திப் பெருவழியிலே மரண பயத்தை வென்றழிக்க முயலவில்லை. இரணியன் போகும் தன்மானத் தனிவீர நெறியில் தெய்வத்திற்கு இடம் எங்கே!

எனவே, புஜபலத்தாலும் வரபலத்தாலும் மரணத்தை வெல்லத் திட்டமிட்

டிருக்கிறன்; 'வென்றுவிட்டோம்!' என்றும் கனுக் காணலானுன்.

இரணியன் தன் கல்வி யறிவையும் இயற்கை நுண்ணறிவையும் மிகவும் கூர்மையாகத் தீட்டிக் கொண்டானல்லவா! இப்பேர்ப்பட்டவனுடைய பல பராக்கிரமத்தைக் கேளுங்கள் :

பெண்ணில், பேரெழில்
ஆணினில், அலியினில்,
பிறிதும்
உள்நிற் கும்முயிர்
உள்ளதில், இல்லதில்
உலவான் ;
கண்ணிற் காண்பன,
கருதுவ யாவினும்
கழியான் ;
மண்ணில் சாகிலன் ;
வானிலும் சாகிலன்
வரத்தால்.

[பேரெழில் — (இங்கே) மிக்க வளர்ச்சி. பிறிதும் – மற்றும். உள்நிற்கும் உயிர் உள்ளதில் – உடம்பினுள் நிற்கிற உயிரையுடைய பிராணியாலும். இல்லதில் – உயிர் இல்லாத ஜடப் பொருளாலும். உலவான்–சாகமாட்டான். கருதுவ–கருத்திலே கருதப்படும் பொருள்களும் ஆகிய. யாவினும் – எல்லாவற்றாலும். சாகிலன் – சாகமாட்டான்.]

வர பலத்தை இரணியன் ராவணனைக் காட்டிலும் அதி ஜாக்கிரதையாகப் பெற்றிருக்கிறன் :

தேவ ராயினர்
ஏவரும், சேணிடைத்
திரியும்
யாவ ரேயும்,மற்(று)
எண்ணுதற்(கு) அரியராய்
இயன்ற
கோவை மால்அயன்,
மானிடன் யாவரும்
கொல்ல
ஆவி தீர்கிலன் ;
ஆற்றலும் தீர்கிலன்
அனையான்

[ஏவரும் – எல்லாரும். சேணிடை – வானத்தில். யாவரேயும் – யாவரும். இயன்ற – பொருந்திய. கோவை – தொடர்ச்சியாய்ச் சொல்லப்படுகிற. மால் – திருமால். அயன் – பிரமன். மானிடன் – மான் இடன் ; மானை இடக்கையில் உடைய சிவபெருமான். ஆவி தீர்கிலன் – உயிர் நீங்கான். அனையான்– அந்த இரணியன்.]

தேவரும் மூவரும் யாவரும் இரணியனைக் கொல்லவும் முடியாது; இவனுடைய வலிமையை ஒடுக்கவும் முடியாது. தன்னுடைய வேதப் பயிற்சியும் போத உணர்ச்சியும் தூண்ட இவன் பெற்றுக் கொண்டிருக்கும் வரபலம் இது.

இரணிய போதம் இன்னும் எப்படியெல்லாம் மரண பயத்தினின்று தன்னை முற்றும் விடுவித்துக் கொள்ள முயன்றிருக்கிறதென்று பார்க்கலாம்:

நீரில் சாகிலன் ;
நெருப்பினும் சாகிலன் ;
நிமிர்ந்த
மாரு தத்தினும்,
மண்ணின்மேல் எவற்றிலும்
மாளான் ;
ஓரும் தேவரும்
முனிவரும் பிறர்களும்
உரைப்பச்
சாரும் சாபமும்
அனையவன் தனைச்சென்று
சாரா.

[நிமிர்ந்த மாருதத்தினும் – வீசி எழும் காற்றிலும். ஓரும்–அறியவல்ல. உரைப்பச் சாரும் – இடுவதனுல் வருகின்ற. சாரா–அணுகுவன அல்ல.]

ஆயுதங்களாலும் சாவில்லை, சாபங்களாலும் சாவில்லை என்பதாக வரம் பெற்றுக் கொண்டிருக்கும் இரணியன் இன்னும் எவ்வளவு அறிவு நுட்பத்துடன் சாவைத் துரத்த முயன்றிருக்கிறன்!

உள்ளும் சாகிலன்,
புறத்தினும் உலக்கிலன் ;
உலவாக்
கொள்ளைத் தெய்வவான்
படைக்கலம் யாவையும்
கொல்லா ;
நள்ளில் சாகிலன் ;
பகலிடைச் சாகிலன் ;
நமனுர்
கொள்ளச் சாகிலன் :
ஆர்இனி அவன்உயிர்
கொள்வார்?

[புறத்தினும் – வெளியிலேயும். உலக்கிலன் – சாகமாட்டான். உலவா – அழிவில்லாத. கொள்ளை – மிகுதியாகிய. நள்ளில் – இரவிலும்.]



தனிக் கதை

இப்படிப் பதினெட்டுப் பாடல்களில் இரணிய பராக்கிரமம் வருணிக்கப் படுகிறது எனினும் இரணிய சித்திரம் தெளிவாய்க் கலைக் கண்ணுக்கு இலக்காக வில்லையென்று தான் சொல்ல வேண்டும்.

கம்பனுடைய ராமாயண சித்திரசாலையில் கதா பாத்திரங்கள் எவ்வளவு நாடகத் திறமையுடன் வந்து தோன்றுகின்றன! அத்தகைய முறையில் இரணிய குணசித்திரம் வார்க்கப் பெறாததே, இக்கதை ஒரு தனிக்கதையாக ராமாயணத்திற்கு முன் பாடப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு ஒரு பெருஞ் சான்றாகும்.

மகனும் தந்தையும்

இனி, நாம் இரணியன் மகனான பிரகலாதனைக் குறித்துக் கேள்விப் படுகிறோம். இரணியன் அசுர சம்பத்திற்கு இலக்கியமாகிறானென்றால், தெய்வ சம்பத்திற்கு இலக்கியமாக அமைகிறான் பிரகலாதன்.

அருமைப் பிள்ளையே முரட்டுத் தந்தையின் முடிவிற்குக் காரணமாக வேண்டுமென்பது விதியின் சதி. இந்தச் சதி முன் இரணியன் மதியோ, ஆற்றலோ என்ன செய்ய முடியும்!

ஆய வன்தனக்(கு)
அருமகன் அறிஞரின்
அறிஞன்,
தூயர் என்பவர்
யாரினும் மறையினும்
தூயான்,
நாய கன்தனி
ஞானி,நல் அறத்துக்கு
நாதன்,
தாயின் மன்னுயிர்க்(கு)
அன்பினன் உளன்ஒரு
தக்கோன்.

[ஆயவன் தனக்கு – அத்தன்மையனாகிய இரணியனுக்கு. அருமகன் – அருமைப் பிள்ளை. அறிஞரின் அறிஞன் – அறிஞர்களுக்கும் அறிஞர்களாக உள்ளவன். தூயர் என்பவர் – பரிசுத்தர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோர். யாரினும் – யாவரினும். மறையினும் – வேதங்களினும். நாயகன் தனி ஞானி – எல்லோருக்கும் நாயகனாகிய பகவான் விஷயமாக ஒப்பற்ற ஞானமுள்ளவன். நாதன் – தலைவன். தாயின் – தாயைக் காட்டிலும். மன் உயிர்க்கு – உலகில் நிலை பெற்றிருக்கும் பிராணிகளிடம். தக்கோன் – தகுதியுடையவன்.]

இரணியனும் அறிவாளிதான். வேதத்தைப் பிரமகுரு மூலமாய் அறிந்து கொண்டவன். அத்தகைய அறிவுடன் இயற்கை நுண்ணறிவையும் ஒன்றுபடத் திரித்துத் தன் பராக்கிரம நெருப்பை ஜொலிக்கச் செய்து கொண்டவன்.

எப்படியெல்லாம் வரம் பெற்றுச் சாவைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று ஆலோசித்துப் பார்த்து வரம் பெற்றுக் கொண்டதே அறிவுத் திறமைக்குச் சான்று அல்லவா? எனினும் 'அறிஞரின் அறிஞன்' பிரகலாதன்தான். இவன் தான் சாகா வரம் பெற்றவன்; இரணியன் அல்ல! பிரகலாத அறிவின் முன் இரணிய அறிவெல்லாம் இருள் தான்!

ஒரு கதையிலே, பாட்டி சாகக் கிடக்கிறாள். பேரப்பிள்ளை – புத்திசாலி – சாவை எப்படித் தடுக்கலாம் என்று ஆலோசித்துப் பார்க்கிறான். யமனை உள்ளே வரவிடக்கூடாது என்று கதவை அடைக்கிறான். தாளிடுகிறான்; இரட்டைத் தாளும் இடுகிறான். ஜன்னலை மூடுகிறான். துவாரங்களை யெல்லாம் அடைத்து விடுகிறான் வெகு ஜாக்கிரதையாக. எனினும் பொல்லா நமனார் எப்படியோ புகுந்து பாட்டி உயிரைக் கவர்ந்து கொண்டு போய் விட்டார்!— என்று படித்திருக்கிறோமல்லவா?

இரணிய போதம் ஜடஞான போதம் தானே! கதையிலே சிறு பிள்ளை பாட்டிக்குச் செய்த பாதுகாப்பே தான் இரணியனார் தம் இன்னுயிருக்குச் செய்து கொண்ட வர பலமாகிய பெருங் காவலும்!

இரணியன் அறிவு பிரகலாதன் அறிவைப் போல் தூய நல்லறிவன்று; மெய்ஞ்ஞான போதம் அன்று. நல்லறத்துக்குத் துணை செய்யும் அறிவே நல்லறிவு. இந்த அறிவு இரணியனுக்கு இல்லையே.

அன்பே அறத்தின் வித்து. மன்னுயிரைத் தன்னுயிர்போல் நேசிப்பதே அன்பு நெறி. இதற்கு அன்புருவாகிய இறைவன் மீது காதலாகிய பக்தி இன்றியமையாதது. இத்தகைய பக்தியுடன் முற்றும் முரண்படுவது இரணியனுள்ளம். இத்தகைய பக்தி பிரகலாத சொரூபம், பிரகலாத சக்தி.

இரணியன் தன் மகனும் தன்னைப் போல் அறிவாளியாகவும் வல்லாளகண்டனாகவும் விளங்கவேண்டும் என்று விரும்புகிறான். தன்னைப் போல் வேதம் ஓதிப் போத முற்றுத் தனக்குத் தக்க பிள்ளையாகப் பேர் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறான்.

பிள்ளைப் பாசத்தை ஞானியரும் துறப்பதில்லை என்பர். இரணிய சர்வாதிகாரியும் பிள்ளையைக் கண்டு மன மகிழ்ந்து உருகுகிறவன் தான்!

ஒரு நாள் மகனை வரவழைக்கிறான். பார்த்துப் பார்த்து உளம் நெகிழ்ந்து மகிழ்கிறான். 'என்னுடைய ஆக்ஞா சக்ரத்துக்கு உரிய அருமை மகனே!' என்று உளம் குளிர வாய் குளிர அழைக்கிறான். 'நீ வேதங்களைக் கற்றறிய வேணும்' என்று உரக்கச் சொல்லுகிறான்.

இரணியன் ஆட்சி மகோன்னத நிலையில் இருக்கிறது. இரணியன் ஆயுளுக்கோ வரம்பில்லை யென்பது உலகம் அறிந்ததே. அறிவுக்கும் வல்லமைக்கும் தான் வரம்பு உண்டா? மக்களுடைய ராஜபக்திக்கும் எல்லையில்லை. இந்த நிலையிலே மகனைப் பெற்றெடுத்த இரணியன் தன் பிள்ளையைக் கல்விக் கடலாக்க வேண்டுமென்று துடிக்கிறான்; ஏதேதோ கனவு காண்கிறான்.

குறைநிசய வார்ப்பிலுள்ள குறைகளும் மறைந்து போகின்றன, இனி இக்கதைப் போக்கிலே.

கம்பன் பாடிய பிரகலாதச் சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

4. ஓதாது உணர்ந்தவன்

தன் மகன் படிக்க வேண்டும், வேதம் ஓத வேண்டும், தன்னைப் போல் அறிவாளியாகவும் மகா பலசாலியாகவும் விளங்க வேண்டும்—திவட்டியில் பொருத்திய திவட்டிபோல் ஒளிர வேண்டும் என்றெல்லாம் ஆசை இரணியனுக்கு.

வாழி ஆனவன்
தனைக்கண்டு மனமகிழ்ந்(து)
உருகி,
'ஆழி ஐயநீ
அறிதியால் மறை'என
அறைந்தான்,
ஊழி யும்கடந்(து)
உயர்கின்ற ஆயுளான்,
உலகம்
ஏழும் ஏழும் வந்(து)
அடிதொழ அரசுவிற்-
றிருந்தான்.

[ஆனவன் தனை—மேலே சொன்னவாறு தக்கோனாக விளங்கும் பிரகலாதனை. ஆழி ஐய—எனது ஆக்ஞா சக்ரத்துக்கு, அதாவது அரசாட்சிக்கு, உரிய மகனே. அறிதி—அறிவாய். ஆல்—அசை. என அறைந்தான்—என்று தன் கட்டளையை முழக்கினான். ஊழி—ஊழிக் காலம்; கற்ப காலம்.]

அரண்மனையிலே குருகுலம்

பிறகு இரணியன் தன் மகனுக்கு வேதம் ஓதுவிக்கும்படி ஒரு பிராமணனைக் குருவாக நியமித்தான். மகனைக் குருகுலவாசம் செய்யக் குருவுடன் இரணியன் அனுப்பிவிடவில்லை. தன் மகனுக்கு மட்டும் பாடம் நடக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

குரு, நான்கு வேதங்களை மட்டுமல்ல, வேதங்களின் அங்கமாகிய சிட்சை, வியாகரணம் முதலியவற்றையும் கற்பிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்:

என்றொரு அந்தணன்
எல்லையில் அறிஞனை
ஏவி,
'நன்று நீ இவற்(கு)
உதவுதி மறை'என
நவின்றான்;
சென்று மற்(று) அவன்
தன்னொடும் ஒருசிறை
சேர்ந்தான்,
அன்று நான்மறை
முதலிய ஓதுவான்
அமைந்தான்.

[என்று—என்று இரணியன் சொல்லி. ஓர் அந்தணன் எல்லையில் அறிஞனை—எல்லையில்லாத அறிவுடையவனாகிய ஒரு பிராமணனை. ஏவி—கட்டளையிட்டு வரவழைத்து. நன்று—நன்றாக. இவற்கு—இவனுக்கு. உதவு மறை—வேதங்களைச் சொல்லிக் கொடுப்பாய். என நவின்றான்—என்று சொன்னான். மற்று அவன் தன்னொடும்—அந்தச் சிறுவனோடும். ஒரு சிறை சேர்ந்தான்—விஸ்தாரமான அந்த அரண்மனையின் ஒரு பக்கத்தை அடைந்து. முதலிய—முதலியவற்றை. ஓதுவான்—சொல்ல; கற்பிக்க.]

அப்பா பெயரைச் சொல்லப்பா!

கடவுள் வணக்கத்துடன கல்வி கற்பிக்க வேண்டுமல்லவா! 'இரணியாய நம

என்று உன் தந்தை பெயரைச் சொல்லிக்கொள் அப்பா' என்றான் குருநாதன். பிரமன் தொடக்கமான பிராமணர்களெல்லாம் அன்று அப்படித் தானேசெய்வது வழக்கம்!

ஆனால் சிறுவன் செய்ததென்ன! இப்படிச் செய்வானென்று குரு எதிர் பார்த்திருக்க முடியுமா!



ஓதப்புக்கவன்,
'உந்தைபேர்
உரை'யென
லோடும்,

போதத் தன்
செவித்
தொளை இரு
கைகளால்
பொத்தி,

'மூதக் கோய்!
இது
நற்றவம் அன்
(று)' என
மொழியா,

வேதத்(து) உச்சியின்
மெய்ப்பொருட் பெயரினை
விரித்தான்.

[ஓத – கற்பிக்க. புக்கவன் – தொடங்கியவன்; தொடங்கிய குரு. உந்தை பேர் உரை – உன் தந்தை பெயரை முதலில் சொல்லிக் கொள்; அதாவது 'இரணியாய நம:' என்று ஓது, ஆரம்பத்திலே. போத – நன்றாக. மூதக்கோய் – மூத்த பெரியோனே. இது – நீ சொன்னபடி சொல்வது. நற்றவம் அன்று – நல்ல தவம் அன்று. என மொழியா – என்று மொழிந்து மறுத்துவிட்டு. மெய்ப்பொருட் பெயரினை – மெய்ப் பொருளின் திருநாமத்தை. விரித்தான் – வெளியிட்டுச் சொன்னான்.]

'ஓம் இரணியாய நம:' என்று பிராமண குரு கூறச் சொன்னதும் அசுரச் சிறுவன் 'ஓம் நமோ நாராயணாய' என்று சொல்லுகிறான், — எவ்வளவு பக்தி பரவசமாக! குருவுக்கோ ஏன் இந்த நடுக்கம்? உலகத்திற்கே அப்பன் பெயர் தானே சிறுவன் சொன்னது?


ஓம்நமோநரா –
யணாயஎன்(று) உரைத்(து)உளம்
உருகித்

தான்அமைந்(து)இரு
தடக்கையும் தலைமிசைத்
தாங்கிப்

பூநிறக்கண்கள்
புனல் உக மயிர்ப்புறம்
பொடிப்ப

ஞான நாயகன்
இருந்தனன், அந்தணன்
நடுங்க.

[நாராயணாய – நாராயணனுக்கு. அமைந்து – அடங்கி. தடக்கையும் – பெரிய கைகளையும். தலைமிசை – தலைமேல். பூநிறக்



கண்கள்–தாமரை மலர் போன்ற கண்கள். புனல் உக – நீர் சிந்த. மயிர்ப்புறம் பொடிப்ப–ரோமம் உடம்பின்மீது சிலிர்க்க.]

குருவின் லௌகிக புத்தி

ஒருவாறு தன் நடுக்கத்தைப் போக்கிக் கொண்டு குரு பிரகலாதனை அதட்டிப் பயமுறுத்தப் பார்க்கிறான்:

‘கெடுத்தொ ழிந்தனை
என்னையும் உன்னையும்,
கெடுவாய்!
படுத்தொ ழிந்தனை,
பாவி! எத் தேவரும்
பகர்தற்(கு)
அடுத்த தன்றியே
அயல்ஒன்று பகர, நின்
அறிவில்
எடுத்த தென்! இது
என்செய்த வண்ணம்நீ?’
என்றான்.

[கெடுவாய் – நாசமாய்ப் போகிறவனே. படுத்தொழிந்தனை – அழித்துக் கொண்டாய். பகர்தற்கு–சொல்வதற்கு. அடுத்ததன்றியே – அடாத தாயுள்ள. அயல் ஒன்று – வேறாகிய ஒரு வார்த்தையை. பகர – சொல்லும்படி. நின் அறிவில் எடுத்தது என் – உன் அறிவில் கொண்டது என்ன அதிசயம்.]

‘அட, நாசமாய்ப் போக!’ என்று சபிப்பது போல் பிரகலாதனைக் கூப்பிட்டுப் பயமுறுத்துகிறான்.

கெடுத்தொ ழிந்தனை
என்னையும்!

என்று முதன் முதல் சொல்வதைப் பாருங்கள். 'உன்னையும் கெடுத்துக் கொண்டாய்!' என்பதை அடுத்தபடியாகத்தானே சொல்லுகிருன் குரு!

'என் வயிற்றுப் பிழைப்பிலே மண்ணைப் போட்டாயே!' என்பது தான் இவ்வளவு வயிற்றெரிச்சலுக்கும் நடுக்கத்திற்கும் காரணம். பயம் பயமுறுத்தப் பார்க்கிறது பக்தியை!

பிராமணனுடைய ராஜபக்தியும் லௌகிக புத்தியும் பிரகலாதனை அசைத்துவிடவில்லை. அப்படியே குருவின் கோபமோ, பயமோ, வெறுப்போ இச் சிறுவனை அசைக்கவும் இல்லை.

குருவுக்கு உண்மையில் இரணிய பக்தியைக் காட்டிலும் வயிற்றுப் பெருமான் மீது தான் பக்தி அதிகம். சிறுவன் அறிவில் வளர வேண்டுமே என்ற கவலையோ சிறிதும் இல்லை. எனினும் பரம லௌகிக புத்தியுடன், 'நீ உன் தந்தையின் பெயரைச் சொல்லவேண்டும்' என்றும், 'நீ உன்னையும் கெடுத்துக் கொண்டாய்' என்றும் சொன்னுனல்லவா!

பக்தியே சக்தி

அதற்கும் பதில் சொல்லிச் சமாதானமும் சொல்கிறது பிரகலாதனின் பக்தி யுள்ளம்:

'என்னை உய்வித்தேன்,
எந்தையை உய்வித்தேன்;
இனைய
உன்னை உய்வித்(து), இவ்
உலகையும் உய்விப்பான்
அமைந்து,
முன்னை மூலத்தின்
முதற்பெயர் மொழிவது
மொழிந்தேன்;
என்னை குற்றம்யான்
இயற்றிய(து)? இயம்புதி'
என்ருன்:

[உய்வித்தேன் – கடேறச் செய்தேன்; என் பிழைப்பிற்கு நான் வழி தேடிக் கொண்டேன். இனைய – இத்தன்மையனை: அதாவது, எனக்குக் குருவாக அமைந்த. உய்விப்பான் அமைந்து – உய்ந்து போகுமாறு தொடங்கி. முன்னை – பழமையான. என்னை குற்றம் – என்ன குற்றம். இயம்புதி – சொல்லு; சொல்வாய்.]

'ஓம் நமோ நாராயணுய' என்று ஓதித் தலைமேல் கைகூப்பி அஞ்சலி செய்து கடவுளைத் தியானித்துக் கண்ணீர் வர மெய்ம் மயிர் சிலிர்ப்பப் பக்தி பரவசனுயிருந்தானல்லவா பிரகலாதன்! 'இது ஒருவர் பிழைப்பையும் கெடுப்பதற்காக அல்ல' என்கிருன். 'எல்லாரும் பிழைக்கும் வழி தான் இது' என்று அழுத்தமாய்க் கூறுகிருன்.

பிழைப்பு என்ருல் வயிற்றுப் பிழைப்பு மட்டுமல்ல. வயிறு மட்டும் மனிதனுகுமா? உண்மை மனிதனுகிய ஆன்மாவின் பிழைப்பிற்கு,

முன்னை மூலத்தின்
முதற்பெயர் மொழிவது

இன்றியமையாததாகும்.

இதை உள்ளபடி மொழிவதில் உள்ளம் உருகி ஒடுங்கும்; உடம்பும் பக்திமயமாகும். பிரகலாதனது இந்த நிலை தான், வயிற்றுப் பிழைப்பையே ஆன்மாவின் பிழைப்பிற்கும் மேலாக மதித்திருந்த பிராமணனை நடுங்கச் செய்தது.

இந்த நிலையில் பக்தியின் சக்தியை உணர்ந்து கொண்ட பிரகலாதன், 'என்னை உய்வித்தேன்' என்று தைரியமாகச் சொல்லுகிருன். 'எந்தையை உய்வித்தேன்' என்றும் துணிந்து பேசுகிருன். 'குருவை உய்வித்து இவ்வுலகை உய்விக்கவும் முயல்வேன்' என்பதாகவும் திடன் சொல்லுகிருன். இது பக்தி மதத்தின் சக்திமயமான ஓர் இரகசியம்.

தந்தையையும் உய்விக்கிருன்!

பிரகலாதன் தன்னை உய்வித்ததாகக் கூறுவது சரி; ஆனுல் தந்தையை உய்வித்ததாகவும் சொல்லுகிருனே, அது எப்படி? நம்மாழ்வார் பாசுரம் ஒன்றில் இதற்கு விடை கிடைக்கிறது.

ஆழ்வாருடைய நெகிழ்ந்த–கருணை மயமான நெஞ்சி லிருந்து இறைவன் தமிழ்க் கவிதையாகப் பொங்கித் தொண்டருலகை வாழ்விக்கிருனும். இரணியனுடைய வன்னெஞ்சமோ இறைவனுக்கு இத்தகைய வசதி யொன்றும் அளிப்பதாக இல்லை; அதைக் கிழித்துத் தான் திருத்த வேண்டிய தாயிற்ரும். எப்படியும் நம்பெருமான் நமக்கெல்லாம் அருள் செய்ய வேண்டுமென்றே சங்கற்பம் செய்து கொண்டிருக்கிருன் என்பது நம்மாழ்வார் வாக்கு. எனவே,

எந்தையை உய்வித்தேன்!

என்றுபிரகலாதன் கூறுவதும்சரிதானே!

பேராற்றலும் பேராசையும்

'உன்னை உய்வித்து' என்று குருவையும் உய்விப்பதாகச் திடன் பேசுவதும்

பக்தியின் அற்புதங்களில் ஒன்று. ஆசாரியன் உபதேசிக்கிறான்.

> ஏற்ற கலங்கள்
> எதிர்பொங்கி மீதளிப்ப

என்று சொல்லும்படி உபதேசத்தை ஏற்றுக் கொள்ளும் கலமாகிய சீடனுள்ளமும் எதிர் பொங்கி ஆசாரியனுக்கே உபதேசம் செய்யும் சிறப்பையும் பெறுகின்றதாம்.

பிரகலாதனுக்கோ இந்த ஆசாரியன் நல்லுரை வழங்கவுமில்லை. இந்த நிலையில் 'இயலுமானால் இந்த அந்தணனையும் உய்விக்க வேண்டும்' என்று பக்தமணியாகிய பிரகலாதனுக்குத் தோன்றுகிறது.


'உலகையும் உய்விப்பான் அமைந்து' என்று பிரகலாதன் கூறுவதும் பக்தி நெறியின் சிறப்பியல்பே. 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்பது வள்ளுவர் கண்ட வான்மறை. தம்மை உய்விக்கச் செய்த பக்திநெறி உலகையும் உய்விக்கச் செய்ய வேண்டும் என்பது பக்தன் பேராசை.

பிரகலாதனுடைய இந்த நிலையை வயிற்றுப் பெருமானை வழிபடுவதிலும், அதற்காக இரணியனை வழிபடுவதிலும் கண்ணும் கருத்துமாயிருக்கும் குரு எப்படி அறிந்து கொள்ள முடியும்? 'மூலத்தின் முதற் பெயர்' என்று பிரகலாதன் பேசியது விளங்கியதோ, விளங்க வில்லையோ!—முதல்வர்க்கும் முதலோன் உன் தந்தை தான்!' என்கிறான் குரு. அவன் திருப் பெயரே முதற் பெயர் என்கிறான்.

பிராமணனாகிய தனக்கு இரணியன் திருப்பெயரை உச்சரிக்க உரிமை உண்டு என்று ஒரு விசேஷ உரிமையும் பாராட்டுகிறான். 'ஓம் ஹிரண்யாய நம:' என்னும் மகா மந்திரத்தை உச்சரிக்க உரிமை பெற்றவன், உபதேசிக்கவும் உரிமை பெற்றிருக்க வேண்டும் அல்லவா?

'அந்தணனும், எல்லையில்லாத அறிஞனுமாகிய நான் சொல்லுகிறேன் மகன்; என்னைக் காட்டிலும் சிறு பிள்ளையாகிய நீ அறிவாயோ?' என்கிறான். 'நான் சொல்வதும் உன்னைச் சொல்லச் சொல்வதும் உன் தந்தை பெயரைத் தானே; என் தந்தை பெயரில்லையே!' என்பது போலவும் வாதாடுகிறான்.

'என் தந்தையுமில்லை; உன் தந்தையுமில்லை; வேறு யாரோ ஒரு நாராயணன் பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தால் என் வயிறு நிறையுமா!—உன் வயிறு தான் நிறையப் போகிறதா!' என்றெல்லாம் தர்க்க ரீதியாகத் தான் பேசுகிறான் குரு. 'எப்படியும் என்னைக் கெடுத்து விடாதே' என்பது பல்லவி.



தென்னாட்டுச் செல்வங்கள்

சௌந்தரிய நாயகி

225

(சாந்தநாதர் கோயில்,
புதுக்கோட்டை)

இக் கோயில் வார்ப்பு விக்கிரகங்களில் நடராஜர் – சிவகாமி விக்கிரகங்கள் விசேஷ ஸ்தானங்கள் பெற்றிருப்பது போல், மூலஸ்தான அம்மனின் சிலா பிம்பத்திற்கும் ஒரு முதன்மையான ஸ்தானம் உரியது. அவ்வளவு அழகு, அவ்வளவு தேகக் கட்டுடன் கூடிய ஒய்யார நிலை ஸ்ரீ வேதநாயகி அம்மனுக்கு.

இத்தகைய தோற்றம் வேறு இடங்களில் காணக் கிடைக்குமா என்பது ஐயம் தான். இந்தத் தோற்றத்தை நன்கு தூக்கிக் காட்டுகின்றன கிரீடத்தின் வேலைப்பாடுகள் முதலியன.

காதைச் சுற்றிச் சுருண்டு அழகாக இருக்கும் கேசத்தின் வேலைப்பாடுகளைத் தான் பாருங்கள். கழுத்தில் தாலியும், அதைச் சுற்றி மணிகளாலும் முத்துக்களாலும் ஆன ஆபரணங்களும் தான் என்ன அழகு!

இடது தோளிலிருந்து வலது பக்கமாக வந்துள்ள மேலாக்கும், இடையைச் சுற்றியுள்ள நுட்ப அலங்காரங்களும் ஆபரணங்களும் தான் எத்தகைய சிற்பத் திறனுக்குச் சான்றாக

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

5. பொய்யறிவும் மெய்யறிவும்

திருமால் சிவபெருமான் ஆகிய இரு பெருந் தெய்வங்களின் திருநாமங்களும் ஒழிந்து இரணிய நாமாவளி முழங்கிக் கொண்டிருந்த உலகத்தில், இரணியனுடைய செல்வப் பிள்ளையே 'ஹிரண்யாய நம:' என்ற மகா மந்திரத்தை மறுத்து, 'ஓம் நமோ நாராயணாய' என்று சொல்லத் தொடங்கி விட்டான் என்றால், இதைக் காட்டிலும் ஒரு புரட்சி உண்டா!

பிள்ளை யுள்ளத்தில் யார் இந்த விதையை விதைத்திருக்கக் கூடும்? உபாத்தியாயர் மீது இரணியன் குற்றம் சுமத்திக் கடுமையாகத் தண்டிக்கவும் கூடுமல்லவா!

குருவின் சங்கடம்

இந்த நிலையில் குரு வாய் விட்டுச் சொல்லுகிறான்:

'முந்தை வானவர்
யாவர்க்கும், முதல்வர்க்கும்
முதலோன்
உந்தை; மற்(று)அவன்
திருப்பெயர் உரைசெயற்(கு)
உரிய
அந்தணாளனேன்
என்னினும் அறிதியோ?
ஐய!
எந்தை! இப்பெயர்
உரைத்(து)எனைக் கெடுத்தி
டல்!'

என்றான்.

[முந்தை வானவர் – பழமையான தேவர்கள். முதல்வர்க்கும் – முதன்மையான பதவி வகிக்கும் மும்மூர்த்திகளுக்கும். முதலோன் – முதல்வன்; தலைவன். உந்தை–உன் தந்தை. அந்தணாளனேன் என்னினும்–பிராமண சிரேஷ்டனாகிய என்னைக் காட்டிலும். அறிதியோ– அறிவாயோ. ஐய–ஐயனே. எந்தை–என் அப்பனே. கெடுத்திடல் – கெடுத்து விடாதே.]

'எல்லாருக்கும் மேலான பரம் பொருளாகி விட்டானே உன் தந்தை, தன்னுடைய ஸர்வாதிகார மாட்சியால். இன்றைய பரப்பிரம்மம் திருமாலு மல்ல, சிவபெருமானு மல்ல; உன்னுடைய தந்தையாகிய இரணிய மூர்த்தி தானே! இந்தப் பெருமையில் உனக்கு உரிமையுண்டல்லவா?' என்பதை அழுத்தமாக உணர்த்துகிறது, 'உந்தை' என்று எதுகையில் வந்து விழுந்திருப்பது.

'திருப்பெயர்' என்று இரணிய நாமத்தைக் குறிப்பிடுவது, அந்தணனின் இரணிய பக்தி பரவசத்தைக் குறிப்பிடுகிறது.

'அந்தணாளனேன் என்னினும் அறிதியோ!' என்பது வித்தைச் செருக்கு மட்டுமல்ல, 'இரணிய தாஸன்' என்ற பக்திச் செருக்கும் கூட! 'எல்லையில் அறிஞன்' அல்லவா ' சந்தர்ப்பவாதியாகி இரணிய பக்தனாகிப் பொருளும் புகழும் ஈட்டிக் கொள்ளத் தெரியாதா!

செய்யுளின் முதல் மூன்று அடிகளில் தன் அறிவைக் கொண்டு அடித்துப் பேசுவது போல் ஆசிரியன் பேசிய



போதிலும், கடைசியாக ஒரு பரிதாப அசட்டுத் தோற்றத்துடன்,

எந்தை! இப்பெயர் உரைத்(து) எனக்கெடுத்திடல்!

என்று முடிப்பதைப் பாருங்கள்!

ஆம்; அந்த அசடு வழியும் பார்வையையும், அச்சம் தோய்ந்த பரிதாபக் குரலையும், சவலை கிழித்த முகக் கோடுகளையும் பார்க்கிறோம், கேட்கிறோம் இந்த அருமையான செய்யுள் வாயிலாக.

இந்த அந்தணனை 'எல்லையில் அறிஞன்' என்று அறிமுகப்படுத்தியது போல் இப்பொழுது "வேத பாரகன்" என்றும் கவிஞன் குறிப்பிடுகிறான். எல்லையில்லாத அறிவும், வேதங்களின் எல்லையை அறியும் அறிவும் பரந்த அறிவாக இருந்த போதிலும், சிறந்த அறிவாக இருக்க வேண்டுமென்பதில்லையே. பல விஷயங்களை அறிந்து கொள்ளும் அறிவிலே பரப்பும் இருக்கலாம்; கனமும் இருக்கலாம்; ஆனால் குணம்-பண்பு-இருக்க வேண்டுமென்பதில்லையே!

அறிவாளன் அந்தணனாக இருக்கலாம்; ஆனால் பண்பாளனாகும்போதுதான் அறிவு விளக்கம் பெறக் காண்கிறோம். மெய்யறிவைப் பரவலான அறிவிலும் இரவலான அறிவிலும் இரணிய பயத்திலும் இழந்தவன் இந்த அந்தணன்!

'அறியேன்' என்னும் அறிஞன்

இத்தகைய குருவின் சொல்லை மறுத்துப் பேசுகிறான் பிரகலாதன்:

வேத பாரகன்
அவ்வுரை கூறலும்
விமலன்,
'ஆதி நாயகன்
பெயர் அன்றி யான்பிறி(து)
அறியேன்!
ஓத வேண்டுவ(து)
இல்லை; என் உணர்வினுக்(கு)
ஒன்றும்
போதியாததும்
இல்லை!' என்(று) இவையிவை
புகன்றான்.

[வேத பாரகன் - வேதங்களின் எல்லையை அறிந்தவன். விமலன் - குற்றமற்றவனான பிரகலாதன். பிறிது - மற்றொன்றை. ஓத வேண்டுவது இல்லை - இது குறித்து நான் இனிமேல் கற்றுக்



கொள்ள வேண்டுவது இல்லை. இவை இவை - இந்த இந்த வார்த்தைகளை.]

'ஆதிநாயகன் பெயரன்றி யான் பிறிது அறியேன்' என்று பிரகலாதன் கூறுவதுடன் தாயுமானசுவாமிகளின் பின்வரும் வாக்கை ஒப்பிடலாம்:

எல்லாரும் இன்புற்
றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்(று)
அறியேன், பராபரமே!

அறிவுச் சுமையை நெஞ்சிலிருந்து அப்படியே அநாயாசமாகத் தூக்கி எறிந்து உள்ளொளியால் உண்மை கண்டு பேசும் பேச்சு இது.



பக்தியே தவம்

பிரகலாதன் இனி ஆறு பாடல்களில் குருவுக்கு உபதேசம் செய்வதுபோலப் பேசுகிறான். 'நான் வேதம் ஓத வேண்டியதில்லை. வேதப் பொருளைத் தெளிவாக உணர்ந்து கொண்டவனானேன். இறைவனே என் அகம்புகுந்து உணர்த்துகிறான்!' என்கிறான்.

இத்தகைய நிலைக்குக் காரணமான பக்தியைச் செல்வமாகப் பெற்று வாழ்வதே பெரு நெறி என்கிறான் பிரகலாதன்:

காடு பற்றியும்,
கனவரை பற்றியும்,
கலைத்தோல்
மூடி முற்றியும்,
முண்டித்தும், நீட்டியும்,
முறையால்
வீடு பெற்றவர்
பெற்றதின் விழுமிய(து)
இயன்ற
மாடு பெற்றனன்;
மற்றினி என்பெற
வருந்தி?

[காடு பற்றியும்–காட்டை உறைவிடமாகக் கொண்டும். கனவரை பற்றியும்–பெரிய மலையை உறைவிடமாகக் கொண்டும். கலைத் தோல்–மிருகத் தோலால் இயன்ற. மூடி–உடலை மூடுவது; (இங்கே) ஆடை. தோல் மூடி–தோலாடை. முற்றியும்–உடம்பை மறைத்துக் கொண்டும். முண்டித்தும்–மொட்டையடித்துக் கொண்டும், நீட்டியும்–சடையாக்கி நீளத் தொங்கவிட்டுக்கொண்டும். முறையால்–இத்தகைய முறைகளால் மிகவும் சிரமப்பட்டு. வீடு பெற்றவர்–மோட்சம் பெற்றவர்; (இங்கே) முக்தி நிலையை அடைந்தவர்கள். பெற்றதின்–பெற்றதைக் காட்டிலும். விழுமியது இயன்ற–சிறந்ததாய்ப் பொருந்திய.

மாடு – செல்வம். பெற்றனன்-பெற்றேன்.]

உடம்பு வாடத் தவங்கிடந்து கஷ்டப்படுவதைக் காட்டிலும் சிறந்த உபாயம் பிரபத்தி நெறியே என்பது பிரகலாதன் கொள்கை. உள்ளும் புறமுமாய் எங்கும் கரந்து பரந்து பரமபத நாதனுகவும் உலகங்களுக் கெல்லாம் தாய் தந்தையாகவும் இருக்கும் பகவானே சரணம் என்று அவன் அருளுக்கு இலக்காகி வாழ்வது ஆழ்வார் – ஆசார்யர் காட்டும் பிரபத்திப் பெரு வழி. இப் பெரு வழி எளிய வழியும் கூட.

இந் நெறிக்குத் தனிப்பெரு முதல்வன் பிரகலாதன் என்பர். சத்தியாக்கிரக நன்னெறிக்குப் பேரிலக்கியமும் தனிப்பெரு முதல்வனும் பிரகலாதன் என்பர் காந்தியடிகள். ஸாராம்சத்தில் பிரபத்தி என்ற சரணுகதி நெறியும் சத்தியாக்கிரக நெறியும் ஒன்றே.

இந்த நெறியிலே செல்பவர் அடியார்கள்; இறைவனுக்கு அடிமை செய்வோர். அடிமை என்றதும் சிலர், 'இந்தச் சுதந்திர யுகத்திலே அடிமைப் பேச்சே கூடாது. இறைவனுக்கும் அடிமை செய்யோம்!' என்று சொல்லக்கூடும்.

பக்தியின் அடிமைத் திறன்

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பே 'அடிமை துக்கரூபம்' என்று சொல்லி 'ஆண்டான் – அடிமை' நெறியாகிய பக்தி நெறியை ஆட்சேபித்தவர்கள் உண்டு. அந்நாளிலேயே ஒரு பெரும் பக்தமணி ஆட்சேபத்திற்குத் தக்க விடையும் கொடுத்திருக்கிறுர்.

'வாழ்க்கை பக்திமயமாக, அன்புமயமாக அமைந்து விடும் போது இன்பமல்லவா அடிமை செய்வது!' என்று பொருள்பட அப்பெரியார் தம் கொள்கையை வெளியிட்டார். காதலனுக்குக் காதலி 'அடிமை' செய்வதும், காதலிக்குக் காதலன் தொண்டாற்றுவதும் இன்பமல்லவா! உள்ளுறையும் அழகனும் தெய்வக் காதலனுமாகிய இறைவனுக்கு அடிமை செய்வதோ இன்பத்துள் இன்பம். பேரின்பம் என்பது அப்பெரியாரின் தேர்ந்த கருத்து.

இறைவனுக்கு அடிமையில் புகுவது மட்டும் இன்பமன்று. இறைவனுடைய அடியவர்க்கு அடிமை செய்வதும் பேரின்பமே என்பதும் பிரபத்தி நெறியைச் சார்ந்த கொள்கைதான்.

பக்தி மதத்தின் ஸாரமாகிய இக் கொள்கையையும் பிரகலாதன் குருவுக்கு உபதேசிக்கிறுன். இது இன்பநெறி என்பதை மட்டும் பிரகலாதன் குறிப்பிடவில்லை. ஓதாது ஞானத்தை உணரும் உயர்நெறியும் இதுவே என்கிறுன். இத்தகைய ஞான உணர்ச்சியே இன்பமன்றே!

கல்வி கேள்விகள் இன்றியமையாதன. நான்மறையும் ஓத வேண்டியது தான். கலைகளையும் கற்க வேண்டும்; மெய் வருந்திக் கற்கவும் வேண்டும். எனினும் ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர், ரமண மாமுனிவர் போல் ஓதாது உணரும் ஞான வழியும் உண்டு என்பதை நாம் மறக்கலாகாது.

இத்தகைய 'கல்லாக் கலை'வழிக்கும் பிரபத்தியே எளிய வழியென்பது பிரகலாதன் கொள்கை.

செவிக ளால்பல
கேட்டில ராயினும்,
தேவர்
அவிகொள் நான்மறை
அகப்பொருள் புறப்பொருள்
அறிவார்,
கவிகள் ஆகுவர்;
காண்குவர் மெய்ப்பொருள்,—
காலால்
புவிகொள் நாயகற்(கு)
அடியவர்க்(கு) அடிமையிற்
புக்கார்.

[பல – (இங்கே) பல நூற் பொருள்களை; பல ஆசிரியர்கள் கற்பிக்கும் பல விஷயங்களை. கேட்டிலராயினும் – கேட்கவில்லை என்றாலும். தேவர் அவிகொள் – தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுக்கிற. நான்மறை – நான்கு வேதங்களிலுமுள்ள. அகப்பொருள் – உள்ளுறைப் பொருள். புறப் பொருள் – வெளிப்படையான பொருள். காண்குவர் மெய்ப்பொருள் – தத்துவ அர்த்தங்களைத் தாமே பிரத்தியட்சமாக உணர்ந்து கொள்வார்கள்.]

பகவானுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் அடியார்க்குத் தொண்டு பூண்டு ஒழுகுவதே முக்கியமானது. எம்பெருமானே சரணமென்று அடியார்க்கு அடிமை செய்வோர் பரம ஞானிகளாக விளங்குவர். கல்வியறிவு அல்லது நூலறிவு இல்லாவிட்டாலும் மெய்யறிவு இவர்களிடம் காணப்படும் என்பது பிரகலாதன் கருத்து.

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

6. உத்தியோகம் பெரிதா, உயிர் பெரிதா?

குருவுக்கு அறிவு கூறிய மாணாக்கன், ஓதாமலே தான் உணர்ந்து கொண்டிருக்கும் உண்மையை ஒருவாறு உணர்த்த முயன்றான். தன் நெஞ்சிலே கடவுள் புகுந்து அதைத் தன் கோயிலாக்கிக் கொண்டு அறிவூட்டுவது போன்ற உணர்ச்சியும் பிரகலாதனுக்கு ஏற்படவே, அந்த அறிவுப் பொக்கிஷத்திலிருந்து குருவுக்கும் வாரி வழங்கத் துணிகிறான்.

உபதேசமும் ஓட்டமும்

இந்த நிலையில் திருநாமத்தின் மகிமையையும், 'சரணாகதி' தருமத்தின் இரகசியத்தையும், கைங்கரியச் சிறப்பையும் பேசிவிட்டுப் பின் வருமாறு முடிக்கிறான்:

எனக்கும், நான்முகத் –
 தொருவற்கும், யாரினும்
 உயர்ந்த

தனக்கும் தன்நிலை
 அறிவரும் ஒருதனித்
 தலைவன்,

மனக்கு வந்தனன்;
 வந்தன யாவையும்;
 மறையோய்!

உனக்கும் இன்னதின்
 நல்லதொன்(று) இல்லென
 உரைத்தான்.

[நான்முகத்து ஒருவற்கும் – நான்கு முகங்களையுடைய ஒப்பற்ற பிரம தேவனுக்கும். அறிவரும் – அறிய முடியாத படியுள்ள. ஒரு தனித்தலைவன் – ஒப்பற்ற ஏக நாயகன். மனக்கு – என் மனத்தில். மறையோய் – பிராமணனே. இன்னதின் – இந்த உண்மையைக் காட்டிலும். இல்லென – இல்லையென்று.]

எல்லாவற்றையும் அறிந்தவனல்லவா கடவுள்! அத்தகைய ஸர்வஜ்ஞ நிலைக்கும் ஓர் எல்லை இருக்கிறதாம். முற்றறிவனும் தன் நிலையை முற்றும் அறிந்து கொள்ள வில்லையே என்று சொல்லும்படி இருக்கிறதாம் இறைநிலை.

ஸர்வ சக்திக்கும் தன்னை அழித்துக் கொள்ளும் சக்தி இல்லை என்று ஒரு எல்லைக்கோடு கிழித்துக் காட்டுகிறார்களல்லவா! பிரகலாதன் ஸர்வஜ்ஞ நிலையிலும் – அதாவது, முற்றறிவிலும் ஓர் அறியாமை கற்பித்து எல்லை காட்டுகிறான்.

'அத்தகைய பரமாத்மா என் மனத்திலே வந்து விட்டான்' என்ற அனுபூதியை வந்தவருக்கு,

வந்தன யாவையும்

என்ற உணர்ச்சியும் ஏற்படும். எனவே 'தலைவன் மனக்கு வந்தனன்; வந்தன யாவையும்!' என்கிறான் பிரகலாதன் மறையவனிடம்.

'இந்தச் சரணாகதி நெறியைக் காட்டிலும் நல்லது ஒன்றில்லை; என் பிராமண குருவுக்கும் இதுவே வழி' என்று பிரகலாதன் கூறி முடித்ததும், குரு ஒன்றும் பதில் சொல்லவில்லை. பதில் சொல்ல மாட்டாதவனாய் மனங் கலங்கி இரணியனிடம் ஓடுகிறான்.

இந்தக் கலங்கி ஓடும் உள்ளத்தின் விளைவுகளைப் பாருங்கள்:

மாற்றம் யாதொன்றும்
உரைத்திலன் மறையவன்
மறுகி,
'ஏற்றம் என்எனக்(கு)?
இறுதிவந்(து) எய்திய(து),
என்னா,
ஊற்றம் இல்லவன்
ஓடினன் கனகனை
உற்றான்,
'தோற்ற வந்ததோர்
கனவுகண் டனன்'எனச்
சொன்னான்.

[மாற்றம் - மறுமொழி. மறுகி - மனம் கலங்கி. ஏற்றம் என் எனக்கு - எனக்கு என்ன ஏற்றம் வந்து விட்டது. இந்த வாத்தியார்-உத்தியோகத்தினால். இறுதி - அழிவு. வந்து எய்தியது - வந்து சேர்ந்து விட்டது. என்னா-என்று எண்ணி. ஊற்றம் இல்லவன் - பற்றுக் கோடாகிய கொள்கை இல்லாதவனாய். கனகனை - இரணியனை. உற்றான் - உற்று; அடைந்து. தோற்ற வந்ததோர் கனவு - வந்து தோன்றியதான ஒரு கனவை.]

'இரணியனுடைய ஒரே புதல்வனுக்கு ஆசிரியனாகப் போகிறோமே!' என்ற எக்களிப்பால் தனக்கு விசேஷ ஏற்றம் வந்து விட்டதென்று கருதியிருந்தவன், 'அந்த ஏற்றம் உண்மையில் மாறுவேடம் பூண்ட கூற்றம் தான்!' என்கிறான். உடனே நடந்த செய்தியை அரசனிடம் தெரிவிக்க ஓடுகிறான்.

ஊன்றி நிற்க ஒரு பெருங் கொள்கை இல்லாதவன் ஓடுகிறான் என்று அந்தப் பரிதாப விரைவைச் சுட்டிக் காட்டுகிறது.

ஊற்றம் இல்லவன்
ஓடினன் கனகனை
உற்றான்

என்ற அருமையான செய்யுள் அடி. இப்படி ஓடிப்போகிறவன் எப்படித் தான் செய்தி சொல்லப்போகிறானோ!

கனவா, நனவா?

எப்படி ஆரம்பிக்கலாம் என்று கலங்கி,

தோற்ற வந்ததோர்
கனவுகண் டனன்!


என்கிறான்.

ஏதோ ஒரு பயங்கரமான கனவு கண்டு நடுங்கி இரணியனையே பற்றுக் கோடாகப் பற்றிக் கொண்டு அந்தப் பெரும் பயத்திலிருந்து விழித்துக் கொள்பவனைப் போலப் பேசத் தொடங்குகிறான் பிராமணன்.

உளறிக் கொட்டி விடாமல் ஒருவாறு நிதானமாகவே செய்தி சொல்லுகிறான்:

' எந்தை கேள் : எனக்(கு)
இம்மைக்கும் மறுமைக்கும்
இயம்பச்
சிந்தை யால்இறை
நினைத்தற்கும் அடாதன!
செப்பி,
" முந்தை யேஉணர்ந் -
தேன்பொருள் முற்றும்"
என்(று)
உரைத்(து),உன்
மைந்தன் ஓதிலன்
வேதம்' என்று உரைத்தனன்
வணங்கி,

[எந்தை - என் எஜமானனே. இயம்ப - சொல்லுதற்கும். இறை நினைத்தற்கும் - சிறிது நினைப்பதற்கும். முந்தையே - முன்பே. உணர்ந்தேன் பொருள் முற்றும் - உணர வேண்டிய பொருள் முழுதும் உணர்ந்து கொண்டேன்.]



இப்படிச் செய்தி சொன்ன குருவை நோக்கி இரணியன் வியப்போடு 'அப்படி என் மகன் என்னதான் சொல்லி விட்டான்!' என்று வினவுகிறான். இந்த வினவை மறையவன் எதிர்பார்த்துத் தானே இருக்க வேண்டும்?

அன்ன கேட்(டு)அவன்,
  'அந்தண! அந்தணர்க்(கு)
    அடாத,
முன்னர் யாவரும்
  மொழிதரு முறைமையிற்
    படாத,
தன்ன(து) உள்ளுடை
  உணர்ச்சியால் புதுவது
    தந்த(து)
என்ன சொல்? அவன்
  இயம்பிய(து) இயம்புதி'
    என்றான்.

[அன்ன கேட்டு-அந்தச் சொற்களைக் கேட்டு. அவன்-அந்த இரணியன். அந்தணர்க்கு அடாத-பிராமணர்களுக்குத் தகாததும். மொழிதரு-மொழிந்துள்ள. முறைமையிற் படாத-முறைமைக்கு ஒத்து வராததும். தன்னது உள்ளுடை உணர்ச்சியால்-தனது உள்ளத்திலே உடைய ஒருவகை உணர்ச்சியால். புதுவது தந்தது-புதிதாகத்தானே புனைந்து தந்ததுமாக. இயம்புதி-சொல்வாய்.]

அந்தணன் சொன்னதென்ன! இப்போது இரணியன் கேட்பதென்ன! 'எஜமானனே! உன் மகன் சொன்னது எனக்கு இம்மைக்கும் உதவாது; மறுமைக்கும் உதவாது!' என்றான் அந்தணன்.

இரணியன் வாளுக்கு இரையாகி விட்டால் இம்மை ஏது! மறுமைக்கு முயற்சி செய்யத்தான் இம்மை வாழ்வு ஏது! எனவே, 'சிந்தையால் சிறிது நினைக்கவும் அடாதன செப்பினான் உன் பிள்ளை!' என்றான்.

இரணியனோ, 'முன்பு இல்லாததும் புதிதாகப் பிரகலாதன் கற்பனை செய்து கொண்டதுமான அது என்ன, சொல்!'



என்று பிராமணன் சொல்லாததையும் சேர்த்துக் கொண்டு விளுவிளுன். 'ஹிரண்யாய நம:' என்பது போன்ற கொள்கையோடு முரண்படுவதெல்லாம் புதுமையாகவும் புரட்சியாகவும் கருதப் படுமென்பது குறிப்பு.

அந்தப் புரட்சிகரமான புதுமையைப் பிராமணனிட மிருந்து வெளிப்படுவ தற்கு முன்பே மோப்பம் பிடித்து அறிந்து கொள்ளப் பார்க்கிறது இரணி யனது அறிவு.

சுற்றி வளைத்து மூக்கைத் தொடுவது போலத்தானே மறையவன் பேசுகிருன்! 'அந்தச் செய்தி - மூட்டையை அப் படியே அவிழ்த்துக் காட்டு!' என்று தான் கர்ஜிக்கிருன் இரணியன்.

'பையன் சொன்னதைத்தானே நீ சொல்லப் போகிருய்? சும்மா சொல்லு; தைரியமாகச் சொல்லு; விரைவாகச் சொல்லு. உன்னுேடு வார்த்தைக் கும்மி அடித்துக் கொண்டிருப்பதற்கு எனக்கு அவகாசம் இல்லை. எவ்வளவோ அவசர வேலை' என்ற நயமும் பயமுமான குறிப்புக்கள் ஜொலிக்கின்றன, இரணி யன் பேச்சிலும் குரலிலும்.

பிராமணனுடைய அச்சம் அதிகரித்து விட்டது என்பதில் ஐயமில்லை. நினைப்ப தற்கு முன்பே கைகள் தலைமேல் ஏறிக் குவிந்து பரிதாப அஞ்சலி செய்கின்றன.

ஒரு 'பக்தி' நாடகம்!

இந்த நிலையிலும் நாடகம் நடத்து கிறது வாய்:

அரசன் அஃதுரை
  செய்தனும், மறையவன்
    அஞ்சிச்
சிரத லங்கரம்
  சேர்ந்திடச், 'செவித்தொளை
    சேர்ந்த
உரகம் அன்னசொல்
  யான்உனக்(கு) உரைசெயின்,
    உரவோய்!
நரகம் எய்துவன்;
  நாவும்வெந் துகும்!'என
    நவின்ருன்.

[சிரதலம் கரம் சேர்ந்திட - தலையினி டத்துக் கை சேர்ந்திட. செவித்தொளை சேர்ந்த - எனது இரண்டு காதுகளின் துவாரத்திலே நுழைந்த. உரகம் அன்ன சொல் - பாம்பு போன்ற அச்சொல்லை. உரவோய் - வலிமையுள்ளவனே; நரகம் எய்துவன் - அடியேன் நரகத்தை அடை வேன். நாவும் வெந்து உகும் - எனது நாக்கும் வெந்தொழியும்.]

'அவன் சொன்னதைச் சொல்லு' என்ருனல்லவா இரணியன்? 'அதைத் தானே சொல்ல முடியவில்லை!' என் கிருன் பிராமணன்.

'அது ஒரு சொல்லா? விஷப் பாம் பல்லவா என் செவித் தொளையில் நுழைந்தது!' என்கிருன்.

'அதை உனக்கு நான் உரை செய்யவும் வேண்டுமா? அந்தத் தீவினையோடு இந் தத் தீவினையும் சேர்த்துகொள்ள வேணு மா? அப்படியானுல் அடியேனுக்கு நரகம் தான் கதி!' என்கிருன்.

தண்டனை மறுமையில் தான் என்பது மில்லை. 'இம்மையிலே, இப்போதே என் நாவும் வெந்தொழியுமே அந்தச் சொல்லைத் திருப்பிச் சொல்வதால்!' என்கிருன்.

இந்த நாடகம் போதும் இரணியனை யும் ரஸிக்கச் செய்து மயக்குவதற்கு. இத்தகைய 'ராஜ பக்தி' எத்தகைய ஸர் வாதிகாரத்தையும் ஏய்த்து விடக் கூடி யது தானே!

தப்பியோ வாய்ப்பு

இரணியன் இனிமேல் இவனைக் கவ னிக்கவே யில்லை. மகனைக் கொண்டு வரும்படி உத்தரவு செய்யப் போகிருன், அருகே யிருந்த கிங்கரர்களை நோக்கி.

'தலை தப்பியது தம்பிரான் புண்ணி யம்' என்பர். இந்த அந்தணனுே, 'தலை தப்பிப் பிழைத்ததற்கு என் தலைக் குள்ளே யிருக்கும் மூளை தான் காரணம்!' என்று எண்ணிக் கொண்டே அந்த இடத்தை விட்டு மெல்ல நழுவி யிருக்க வேண்டும்.

'கொண்டு வா மகனை, ஜல்தி!' என்று இரணியன் இரைச்சலிட்டதும் ஏவலா ளர்கள் ஓடுகிருர்கள். வேகமாய் ஓடுகிருர் கள். சில வேலைக்காரர்கள் எஜமானனின் பார்வையில் வேகமாய் ஓடி, அப்பால் மெதுவாய்ப் போவதும் உண்டல்லவா? இரணியனது ஏவலாளரோ ஒரு கணப் பொழுதிற்குள் ஓடிப் போய்ப் பிரகலா தனை அடைகிருர்கள்.

'உத்தரவு' என்கிருர்கள். 'மகாராஜா வும் உன் தந்தையுமான எஜமானரின் கட்டளை, உன்னை அழைத்து வரக் கட் டளை' என்பதைத் தான் 'பணி' (கட் டளை) என்ற ஒரே சின்னஞ் சிறு சொல் லாலும் அபிநயங்களாலும் தெரிவிக் கிருர்கள். மைந்தனும் உடனே வந்து தந்தையைக் கண்டு வணங்குகிருன்.

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

" பி. ஸ்ரீ. "

7. தந்தை யார்? மைந்தன் யார்?

'ஓடினன் கனகனை உற்ருன்' என்ற வாறு ஓடி வந்து இரணியனிடம் செய்தி சொன்னவன், இப்போது இரணியனை விட்டு ஓடியே போய் விட்டான். தன் பக்தியோ பயமோ. கனகனது கனகமோ அதிகாரமோ ஓட்டத்தைத் தடைப் படுத்த வில்லை.

துணையிலான் துணை

இரணியனே மறையவனை மறந்து 'சிறுவனைக் கொணர்க' என்று ஒரு கட்டளை பிறப்பித்து விட்டு, ஒரு கணம் ஓடிப்போகும் ஏவலாளரைப் பார்க்கிருன். 'அடுத்த கணமே மைந்தனைப் பார்த்து விடுகிருன்' என்று சொல்லும் படி அவ்வளவு விரைவில் பிரகலாதன் வந்து தந்தையைத் தொழுகிருன்.

கொடியோன் 'ஜல்தி' என்று ஏவுவதும், உணர்வில்லாத நெஞ்சினரான ஏவலர்கள் முடுக்கிவிட்ட எந்திரங்கள் போல் ஓடிக் கட்டளையை அறிவிப்பதும், மைந்தன் வந்து தந்தையைத் தொழுவதும் இதோ நடைபெறுகின்றன இந்தப் பாட்டிலே :

'கொணர்க மைந்தனை
வல்விரைந்(து)' என்றனன்
கொடியோன் ;
உணர்வில் நெஞ்சினர்
ஏவலர் கடிதினின்
ஓடிக்
கணனின் எய்தினர்
'பணி'யெனத், தாதையைக்
கண்டான்,
துணையி லான்தனைத்
துணையென உடையவன்
தொழுதான்:

[கொணர்க – கொண்டு வருக. வல்விரைந்து – வெகு விரைவாக. உணர்வில் நெஞ்சினர் ஏவலர் – ' ஏன் இந்தக் கட்டளை !' என்று ஆலோசிக்கும் அறிவுத் திறனில்லாத நெஞ்சினரான ஏவலர்கள். கடிதினின் – விரைவாக. கணனின் – ஒரு கணப் பொழுதிற்குள். எய்தினர் – (பிரகலாதனை) அடைந்து. பணி – கட்டளை. தாதை–தந்தை. துணையிலான்–கடவுள்.]

தனக்கொரு துணையில்லாதவனைத் துணை யெனக் கொண்டான் என்பது சாதுரியமான சொல்லடுக்கன்று, பக்தி மதத்தின் ஒரு சாரமான கொள்கை இங்கே குறிக்கப்படுகிறது.

பக்தன் பகவானை அடைகிருனென்ருல், ' துணையிலானைத் துணையிலான் அடைகிருன் ' என்றே ஒரு சூத்திரமாகக் கூறலாம். ' ஒன்றே ; இரண்டல்ல ' என்றே சுருதி கூறும் நிலையில் ' துணையிலான் ' இறைவன். இந்தத் ' துணையிலா'னைத் தவிர வேருெரு துணையுமில்லாதவன் பக்தன் !

இனி, இரணியன் தன் மைந்தனுடன் எப்படி அளவளாவுகிருன் என்பதைப் பார்க்கலாம்.

தொழுத மைந்தனைச்
சுடர்மணி மார்பிடைச்
சுண்ணம்
எழுத அன்பினின்
இறுகுறத் தழுவிமா(டு)
இருத்தி

முழுதும் நோக்கி, 'நீ
வேதியன் கேட்கிலன்
முனியப்

பழுது சொல்லிய(து)
என்? அது பகருதி'
என்றான்.

[சுடர்மணி மார்பிடை— ஒளியுள்ள அழகிய தன் மார்பிலே பூசியுள்ள. சுண்ணம் எழுத – மகரந்தப் பொடி (மைந்தனுடைய உடம்பிலே) படியும்படி. இறுகுற – இறுக. மாடு இருத்தி – தன் பக்கத்திலே உட்கார வைத்துக் கொண்டு. வேதியன் கேட்கிலன் முனிய – பிராமணன் கேட்க மாட்டாமல் வெறுக்கும்படி. பழுது – தவறாக. என் – என்ன. பகருதி – சொல்லு.]

உறவுப் பாசமும் உண்மைப் பாசமும்

'சர்வாதிகாரிக்கும் சர்வாதிகாரி' என்று குழந்தையைக் கூறுவதுண்டு. 'நான் மற்றவர்களுக்குச் சர்வாதிகாரியாக இருக்கலாம்; இந்த என் பிள்ளை தான் எனக்கும் என் மனைவிக்கும் சர்வாதிகாரி!' என்றானும் ஒருவன். கடந்த ஞானியரும் சர்வாதிகாரிகளும் கடக்க முடியாத பிள்ளைப் பாசத்தை இந்த இரணியக் கடவுளும் உடனே கடந்துவிட்டானென்று சொல்வதற்கில்லை!

இவ்வளவு பாசத்துடன் இரணியன் கொஞ்சிக் கேட்டும், பிரகலாதன் தான் சொல்லிய சொல்லையும் தன் கருத்தையும் சிறிதும் மாற்றிக் கொள்ளாமல் நிதானமாகச் சிறிதும் மயக்கமின்றி உள்ளபடியே தெரிவிக்கிறான்:



'சுருதி ஆதிய
தொடங்குறும் எல்லையிற்
சொல்லும்

ஒருவன் யாவர்க்கும்
நாயகன் திருப்பெயர்
உரைத்தேன்;

கருதக் கேட்டிடக்
கட்டுரைத்(து) இடர்க்கடல்
கடக்க

உரிய மற்றிதின்
நல்லதொன்(று) இல்'லென
உரைத்தான்.

[சுருதி ஆதிய – வேதம் முதலிய. தொடங்குறும் எல்லையில் சொல்லும் – தொடங்குகையில் முதலில் சொல்லும். ஒருவன் – ஒப்பற்ற பிரணவ சொரூபியாகியவன். கருத – உணர்ந்து தியானிக்கவும். கேட்டிட – உபதேசமாய்க் கேட்கவும். கட்டுரைத்து இடர்க்கடல் கடக்க – உறுதியாக உரைத்துத் துன்பக்கடலைக் கடக்கவும். உரிய மற்றிதின் – உரியதான இந்தப் பேரைக் காட்டிலும். இல்லென – இல்லையென்று.]

பிரகலாதன் இப்படிப் பொதுவாக விடை கூறினான், உடனே 'அந்தச் சொல் யாது!' என்று இரணியன் மீண்டும் வினவுகிறான்:



தேவர் செய்கையன்
அங்ஙனம் உரைசெயத்
தீயோன்,

'நாவில் வேதியன்
தக்கதே உரைசெயத்
தக்கான்;

ஆவ(து) ஆகுக;
அன்றெனின் அறிகுவம்'
என்றே,

'ஏவ(து) அவ்வுரை?
விளம்புதி விளம்புதி'
என்றான்.

[தேவர் செய்கையன் –அசுர குலத்தில் பிறந்திருந்தும் தேவர்க்கு உரிய செய்கையையுடைய பிரகலாதன். அங்ஙனம் உரை செய –அப்படிச் சொல்ல. தீயோன்–(இங்கே) இரணியன். நாவில் –குற்றமற்ற. வேதியன் – பிராமணனாகிய அந்தக் குரு. தக்கதே உரை செயத் தக்கான் – தகுதியானதையே சொல்லத் தக்கவன். ஆவது ஆகுக – ஆகிறது ஆகட்டும். அன்றெனின்–மைந்தன் சொல்வது தகுதி அல்லாத தாயினும். அறிகுவம் – அதை இன்னதென்று அறிந்து கொண்டு மேலே செய்ய வேண்டியதையும் ஆலோசித்து அறிந்த கொள்வோம், என்றே – என்று நினைத்து. ஏவது அவ்வுரை – என்ன சொல் அது. விளம்புதி – சொல்வாய்.]

திருமந்திர மகிமை

இப்படி இரணியன் ஆத்திரமுற்றுக் கேட்டதும் பிரகலாதன், 'நான் சொன்னது நாராயண நாமம் தான்' என்று வெளிப்படையாக விடையிறுத்து, அந்தத் திருப்பெயரின் மகிமையையும் எடுத்துரைக்கத் தொடங்குகிறான் :

காமம் யாவையும்
தருவதும், அப்பதம்
கடந்தால்
சேம விடுறச்
செய்வதும், செந்தழல்
முகந்த
ஓம வேள்வியின்
உறுபதம் உய்ப்பதும்,
ஒருவன்
நாமம்; அன்னது
கேள்நமோ நாராய—
ணய.

[காமம் யாவையும் – நாம் விரும்புகிற பொருள்களெல்லாம். அப்பதம் கடந்தால் – அந்த நிலையைக் கடந்து விட்டால். சேம விடுற – அழிவில்லாத மோட்சமடைய. செந்தழல் – செந்நிறமுள்ள நெருப்பிலே. முகந்த ஓம வேள்வியின் உறு – (நெய் முதலியவற்றை) மொண்டு சொரியும் ஓமத்தையுடைய யாகங்களினால் அடையக் கூடிய. பதம் உய்ப்பதும் – சொர்க்கம் முதலான போக ஸ்தானங்களில் சேர்ப்பதும். ஒருவன் நாமம் – ஒப்பற்ற கடவுளது திருப்பெயர். அன்னது கேள் – அது இன்னதென்று நான் சொல்லக் கேட்பாயாக.]

நாராயண நாமம் 'அஷ்டாக்ஷர மஹா மந்திரம்' என்ற திரு எட்டெழுத்தின் முக்கிய அம்சமாகும். இந்த மந்திரத்தைத் 'திருமந்திரம்' என்றும் கூறுவதுண்டு.

இத் திருமந்திர மகிமையைப் பின்வருமாறு பேசுகிறான் பிரகலாதன்.

தோற்றம் என்னும்அத்
தொல்வினைத் தொடுகடற்
சுழி நின்(று)
ஏற்று நன்கலன்,
அருங்கலன் யாவர்க்கும்;
இனிய
மாற்ற மங்கலம்;
மாதவர் வேதத்தின்
வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள்;
தெரிந்தமற்(று) இதின் இல்லை
சிறந்த.

[தோற்றம் – பிறவி. தொல்வினைத் தொடுகடற் சுழி நின்று – பழவினையாகிய ஆழ் கடலின் சுழியினின்று. ஏற்றும் நன் கலன் – நம்மைக் கரையேற்ற உதவும் நல்ல மரக்கலம். அருங்கலன் யாவர்க்கும் – யாவர்க்கும் பெறுதற்கு அரிய ஆபரணம். இனிய மாற்ற மங்கலம் – இனிய மங்களச் சொல். மாதவர் வேதத்தின் வரம்பின் – மாமுனிவர்கள் போற்றுகின்ற வேதங்களின் எல்லையாகிய உபநிஷத்துக்களின். தேற்ற மெய்ப் பொருள் – சித்தாந்தமாகிய மெய்ப் பொருள். தெரிந்த மற்று இதின் இல்லை சிறந்த – இப்படியெல்லாம் அறியப்பட்ட இந்தத் திருமந்திரத்தைக் காட்டிலும் சிறந்தவை வேறு இல்லை.]

வேத சிகரத்திலே சித்தாந்தமாகும் மெய்ப் பொருளைக் குறிப்பதே இத் திருமந்திரம் என்று கூறும் பிரகலாதன், இதுவே இதயத்தில் அணிந்து கொள்ளத் தக்க அருங்கலமென்றும், நாவுக்கும் இனிமையாகி அணி செய்யும் மங்களச் சொல் என்றும் கூறுகிறான்.

அலைபட்டுச் சுழிபடுகின்ற பிறவிப் பெருங்கடலிலே இறையருளால் கரை சேர்க்கத் தோன்றியுள்ள நல்ல மரக்கலமும் இத் திருமந்திரமே என்கிறான். ஆனால் இந்த உபதேசமெல்லாம் இரணியனிடம் பலிக்குமா!

பிரகலாதனோ அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தின் மகிமையிலேயே தன்னை முழுக்க இழந்து விடுகிறான். தன் மகிமையிலேயே தன்னை முழுக்க முழுக்க இழந்திருக்கிறான் இரணியன்.

மைந்தன் என்ற முறையில் தந்தையைத் தொழுதான் — திருமந்திர மகிமை பேசுவதற்கு முன்பு. இனிமேல் தந்தை யார், மைந்தன் யார்! 'தூணையிலான்' தானே தந்தையும் துணைவனும்!

மைந்தன் கூறி முடிக்கிறான்; தந்தை விழிக்கிறான் எரித்து விடுவது போல:

'உன்னு யிர்க்கும், என்
உயிர்க்கும், இவ் உலகத்தி –
னுள்ள
மன்னு யிர்க்கும் ஈ(து)
உறுதி என்(று) உணர்வுற
மதித்துச்
சொன்ன(து) இப்பெயர்'
என்றனன் அறிஞரின்
தூயோன்;
மின்னு யிர்க்குவேல்
இரணியன் தழலெழ
விழித்தான்.

கம்பன் பாடிய



பிரகலாத சரித்திரம்

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

8. அரவின் நாமத்தை எலி ஓதுவதா ?

கைவேல் மின்வெட்டக் கண்கள் கனல் கொட்ட, இரணியனது வாயும் தழலை வாரி இறைப்பது போல் சினந்து சீறுகிறது. எவ்வளவோ காலமாக மாண்டு மறைந்து போய் விட்டதென்று இரணியன் இறுமாந்திருந்தானே, அந்தப் பெயரை யல்லவா சொல்லத் துணிந்து விட்டது ஒரு வாய் இன்றைய தினம் ? சர்வாதிகார ஆட்சிக்குக் கடவுளுணர்வு ஒரு பெரிய இடையூறு என்பது இன்றைய இரணியரும் அறிந்தது தானே

கற்றதாரோடு ?

தன்னுடைய ஒரே அருமை மகன் வாயிலிருந்தல்லவா மாண்டவன் மீண்டது போல வந்து குதித்து விட்டது அந்தப் பெயர் ! 'உன்னுயிர்க்கும் என்னுயிர்க்கும், உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் இதுவே உறுதி' என்றல்லவா சொல்லி விட்டான் நாராயண நாமத்தை !

யார் சொல்லிக் கொடுத்திருக்கக் கூடும் பயமில்லாமல் ?

'இற்றை நாள்வரை
யானுள நாள்முதல்,
இப்பேர்
சொற்ற வாயையும்
கருதிய மனத்தையும்
சுடும்என்
ஒற்றை ஆணை! மற்(று)
யார்உனக்(கு) இப்பெயர்
உரைத்தார் ?
கற்ற தாரோடு ?
சொல்லுதி விரைந்(து)'எனக்
கனன்றான்.

[இற்றை நாள்வரை-இன்றைத் தினம் வரை. யான் உள நாள் முதல் -நான் உண்டான நாள் முதல். சொற்ற-சொன்ன. சுடும் என் ஒற்றை ஆணை-என் ஒப்பற்ற ஆணை சுட்டெரித்து விடும். கற்றது ஆரோடு-கற்றது யாவரிடத்தில். சொல்லுதி-சொல்லுவாய். எனக் கனன்றான்-என்று கோபித்தான்.]

பிரகலாதன் சொன்ன நாராயண நாமத்தை மறையவனும் தன் வாயால் திருப்பிச் சொல்லத் துணியவில்லை. இப்போது இரணியனும் அதைத் திருப்பிச் சொல்லாமலே 'இப்பேர்' என்று மட்டும் குறிப்பிடுகிறான். மறையவனுக்குப் பயம் ; இரணியனுக்கோ வெறுப்பும் பகைமையும்.

'குருக்களோடு கற்று ஓதுவது அவன் பெருங் கொற்றம்' என்று இருந்த ராஜ்யத்திலே, 'இப் பெயரைக் கற்ற தாரோடு !' என்று அதிசயமாய்க் கேட்கிறது இரணிய கோபம். 'சொல்லுதி விரைந்து' என்று ஆத்திரப் படுகிறது.

எனினும் விடைக்குக் காத்திராமலே— உடனே விடையை எதிர்பாராதது போலவே — மறுபடியும் அதே கேள்வி பிறக்கிறது, அதே ஆத்திரத்துடன், அதே சீற்ற வெங்கனலுடன் :

முனைவர் வானவர்
முதலினர் மூன்றுல
கத்தும்
எனைவர் உள்ளவர்
யாவரும் என் இரு
கழலே
தினைவ(து); ஓதுவ(து)
என் பெயர்; நினக்(கு) இது
நேர

அனையர் அஞ்சுவர்;
மைந்த! நீ யாரிடை
அறிந்தாய்?

[முனைவர் – முன்னையவர்; முந்தினவர்கள்; (இங்கே) காலம் கண்ட முனிவர்கள். வானவர் – (இங்கே மற்றைய) தேவர்கள். எனைவர் உள்ளவர் யாவரும் – எவ்வகைப்பட்டவராய் உள்ளவர் எல்லோரும். இரு கழலே – இரண்டு திருவடிகளையுமே. நினைவது – தியானிப்பது. ஓதுவது என் பெயர் – ஜபம் செய்வது என் திருநாமமே. நினக்கு இது நேர – அப்படியிருக்கும் போது உனக்கு இந்தப் பெயரைச் சொல்லிக் கொடுக்க. அனையர் – அவர்கள். யாரிடை – யாரிடத்து.]

இரணியனும் ராவணனும்

'இப்பேர்' 'இது' என்று தானே இரணியனும் சொல்லுகிறான், — 'சொன்ன வாயையும் கருதிய மனத்தையும் சுடும் என் ஒற்றை ஆணை' என்ற அந்தத் தன்னுடைய ஆணைக்குத் தானும் பயப்படுவது போலவே!

உண்மைக் காரணமாகிய அந்தப் பகைமையுணர்ச்சியையும் வெளிப்படையாக மகனிடம் தெரிவிக்கிறான்.

மறம்கொள் வெஞ்செரு
மலைகுவான் பன்முறை
வந்தான்

[மறம் – வலிமை. வெஞ்செரு – கொடிய போர். மலைகுவான் – செய்யும் பொருட்டு.]

என்பதாக.

அந்தப் போர்களில் எல்லாம் வெற்றி தனக்குத்தான் என்கிறான். தோற்றவன் தன்னுடைய வாகனத்தின் வேகத்தால் தப்பிப் பிழைத்து ஓடி மறைந்து விட்டானும்:

கறங்கு வெஞ்சிறைக்
கலுழன்தன் கடுமையிற்
கரந்தான்.

[கறங்கு – காற்றாடி போலச் சுழல்கின்ற கொடிய சிறகையுடைய. கலுழன் தன் – கருடனுடைய. கடுமையில் – வேகத்தால். கரந்தான் – (தப்பி) மறைந்தான்.]


தப்பி மறைந்தவன் எங்கே புகுந்து பதுங்கிக் கொண்டான்! கடலிலே புகுந்தவன் இன்னும் அந்த இடத்தை விட்டு அப்பால் வராமல் அப்படியே உறங்கிக் கிடக்கிறானும்:

பிறங்கு தெண்டிரைப்
பெருங்கடல் புக்(கு)இனம்
பெயராது

உறங்கு வான்பெயர்
உறுநியென்(று) ஆர்உனக்(கு)
உரைத்தார்?

[பிறங்கு – விளங்குகிற. தெண்டிரை – தெளிவான அலைகளையுடைய. புக்கு – புகுந்து. இனம் — இன்னம். பெயராது —அப்பால் வராமல்.]

ராவணனும் இப்படி விபீஷணனிடம் சொன்னதுண்டு. 'சிவனும் திருமாலும்



தாம் ஏறி வந்த வாகனங்களோடு என் எதிர் நிற்க மாட்டாமல் ஓடிப்போய் விட்டார்கள்' என்றெல்லாம் சொன்ன பிறகு தானே, விபீஷணன் இரணியன் கதையைச் சொல்லத் தொடங்கினான்!

'உறங்குகிறானா, அல்லது மூச்சே அற்றுப் போய் விழிப்பே அறியாத ஒரே முழு உறக்கத்தில் அமர்ந்து விட்டானா?' என்றும் ராவணன் கேட்டு, 'அவனுக்கா நான் அஞ்சப் போகிறேன்!' என்றானல்லவா! அந்த ராவணனை நோக்கி, 'இரணியனும் இப்படியெல்லாம் சொன்னவன் தான்' என்று விபீஷணன் இடித்துக் காட்டுவது போல் கதை அமைந்திருக்கிறது.

எற்கெனவே செய்திருந்த கதைதான்.

உறங்கு வான்பெயர்
உறுநியென்(று) ஆர்உனக்கு
உரைத்தார்?

என்று இரணியன் சொன்னதற்கு இசைய ராவணனும் 'மந்திரப் படலத்'த்



இல் முன் கூட்டியே சொன்னதாகக் கம்பன் கற்பனை செய்திருக்கலாம், இரணியன் சரிதத்தை இடையே சேர்த்து வைக்கும்போது.

'துன்மதி!' என்று விபீஷணனை ராவணன் விளித்தது போலவே இரணியனும் பிரகலாதனை விளிப்பதாக வருகிறது அடுத்த பாட்டிலே:

'பரவை நுண்மணல்
எண்ணினும் எண்ணரும்
பரப்பின்
குரவர் நம் குலத்(து)
உள்ளவர் அவன் கொலக்
குறைந்தார்;
அரவின் நாமத்தை
எலியிருந் தோதினல்
அதற்கு
விரவு நன்மைஎன்?
துன்மதி! விளம்(பு)'என
வெகுண்டான்.

[பரவை நுண்மணல்-கடலில் நுண்ணிய மணலை. எண்ணரும் பரப்பின் குரவர் - எண்ணி வரையறை செய்ய முடியாத பெருந்தொகையுள்ள. குரவர் நம் குலத்து உள்ளவர் - நம் குலத்தில் தோன்றிய பெரியோர். அவன் கொல - அவன் கொல்ல. குறைந்தார் - தொற்றொழிந்தார். அதற்கு - அந்த

எலிக்கு. விரவு நன்மை என் – அதனுல் வருகின்ற நன்மை யாது. துன்மதி – துர்ப்புத்தி யுடையவனே. விளம்பு – சொல்லு. வெகுண்டான் – கோபித்துக் கொண்டான்.]

கம்பனும் வள்ளுவரும்

'பாம்பின் பெயரை எலியிருந்து ஓதுவது தான் அசுரப் பிள்ளை நாராயண நாமத்தை ஓதுவதும்!' என்பது இரணியன் கொள்கை.

ஒலித்தக்கால் என்னும்
உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்

என்ற திருக்குறளிலிருந்து உருவாகிறது இந்த இரணியன் கொள்கை.

இக் குறளில் கம்பனுக்கு விசேஷ விருப்பம் உண்டென்று கருதலாம். அயோத்தியா காண்டம்—'குகப் படல'த்தில்,

'எலியெலாம் இப்படை
அரவம் யான்!'என
ஒலியுலாம் சேனையை
உவந்து கூயினன்

என்று குகன் வாக்காக ஏற்கெனவே வந்திருக்கிறது. ஆனல் இந்தக் குறளை அங்கே உபயோகித்திருப்பதற்கும், இங்கே யுத்த காண்டத்தில் உபயோகிப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்! கம்பன் மேதை யுத்த காண்டத்திலே விசேஷமாய்க் கனிந்திருப்பதற்கு இதுவும் ஒரு சிறு சான்று.

'அரவின் நாமத்தை எலியிருந்து ஓதினுல் அதற்கு விரவும் நன்மை என்!' என்று கேட்கும் போதே, இரணியனது மனக் கண்முன் திருமால் 'துஷ்ட நிக்கிரகம்' செய்த அசுரர் கூட்டங்களெல்லாம் கடலும் கடற்கரை மணலும் போலத் தோன்றியிருக்கவேண்டும். அவர்களெல்லாம் வம்ச நாசமான காட்சி கோபத்திற்குத் தூபம் போட்டிருக்க வேண்டும்.

இரணியாட்சனும் பகவானும்

அந்த நாசங்களுக்கெல்லாம் சிகரமாகத் தோன்றியிருக்கவேண்டும், தம்பி இரணியாட்சனைத் திருமால் வதஞ் செய்த காட்சி. அந்த நினைவு வரத் தொடங்கியதுமே, அடங்காத கோபத்துடன் மகனைத் 'துன்மதி!' (துர்ப்புத்தி யுடையவனே!) என்கிறுன்.

இரணியாட்சவதத்தைக் குறிப்பிடத் தொடங்கியதும் இரணிய கோபம் வயிற்றெரிச்சலும் மனநோவும் ஆகிவிடுகிறது:

'வயிற்றி னுள்உல—
கேழினெ(டு) ஏழையும்
வைக்கும்
அயிர்ப்பில் ஆற்றல்என்
அனுசனை ஏனம்ஒன்—
ருகி
எயிற்றி னல்எறிந்(து)
இன்னுயிர் உண்டவன்
நாமம்
பயிற்ற வோநினைப்
பயந்தது நான்?' எனப்
பகர்ந்தான்.

[அயிர்ப்பில் ஆற்றல் – சந்தேகத்துக்கு இடமில்லாத ஆற்றலுள்ள. என் அனுசனை – என் தம்பியான இரணியாட்சனை. ஏனம் ஒன்று ஆகி – ஒரு பன்றியாகி. எயிற்றினல் – தன்னுடைய கோரப் பல்லினல். எறிந்து – குத்தி. இன்னுயிர் உண்டவன் – அவன் இனிய உயிரைப் போக்கியவன். பயிற்றவோ – பழக்குதற்காகவோ. நினைப் பயந்தது நான் – நான் உன்னைப் பெற்றது. எனப் பகர்ந்தான் – என்று கூறினன்.]

பகவானைப் பக்தர்கள் ஏழிேனாடு ஏழு உலகங்களையும் வயிற்றினுள்ளே வைக்க வல்லவன் எனப் பாராட்டுவர்; பாடுவர். இரணியாட்சனையும் இரணியன் அப்படியே பாராட்டுகிறுன்; பிரலாபிக்கிறுன்.

பகவான் வயிற்றில் வைத்து ரட்சிக்கிறுன்; இரணியாட்சன் போன்ற அசுரர்களோ வயிற்றில் வைத்துப் பட்சிக்கிறுர்கள்! ஆற்றலை நல்வழிப் படுத்துவதற்கும், தவருகப் பிரயோகிப்பதற்கும் உள்ள வேற்றுமையைக் கம்பன் கலை உய்த்துணர வைக்கும் போக்கிற்கு இதுவும் ஓர் உதாரணம்.

* * *

'உன் சிற்றப்பனைக் கொன்ற அந்தக் கொடிய பகைவனின் நாமத்தை ஓதி ஓதி உன் நாக்கைப் பழக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்கா உன்னைப் பிள்ளையாகப் பெற்றேன்?' என்று கோபக் குரலைக் காட்டிலும் பரிதாபக் குரல் புலப்படுமாறு இரணியன் பேசியதும், பிரகலாதன் ஒரு தத்துவப் பிரசங்கமே செய்யத் தொடங்கி விடுகிறுன்.

கம்பன் பாடிய



பிரகலாத சரித்திரம்

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

9. ஓதாது உணர்ந்ததுதானு ?

'உன் குரு வெறுக்கும்படி நீ என்ன தான் சொல்லி விட்டாய்! அதைச் சொல்லு' என்று தந்தை கேட்க மைந்தன், 'வேண்டியவைகளை வேண்டிய வண்ணம் உதவி முடிவில் வீடு பெறச் செய்யும் மூல மந்திரத்தைச் சொன்னேன். அது தான் ஓம் நமோ நாராயணுய' என்று பதில் சொல்லி விட்டான். அதாவது, குருவிடம் சொன்ன அதே நாராயண நாமம் அமைந்த திருமந்திரத்தை இரணியனிடத்திலும் சொல்லி விட்டான்.

இரணிய கோபம் மூண்டது. எனினும் கோபத்தை ஒருவாறு மட்டுப்படுத்திக் கொண்டு, 'இதை உனக்குச் சொல்லிக் கொடுத்தது யார்! சொல்லு' என்று கர்ஜித்தான் இரணியன்.

'என் திரு நாமமும் திருவடிகளுமல்லவா திரிமூர்த்திகளுக்கும் தஞ்சம்! சர்வ ஜாக்கிரதையாக ஒரே விழிப்பிலிருக்கும் சர்வாதிகாரி இருக்க, உறங்குவோன் பெயரா உனக்குத் தஞ்சம்! அரவின் திரு நாமத்தை எ.பி ஓதுவதுண்டா, பையா!' என்றெல்லாம் இரணியன் நயமும் பயமுமாக எச்சரிக்கை செய்தான்.

அறியாத சிறு பிள்ளையின் பிழையைப் பொறுத்ததாகவும், பேதைப் பிள்ளையைப் பயமுறுத்திப் புத்தி கூறி விட்டதாகவும் காணப்படுகிறது இரணியன் நிலை. இந்த நிலையில், இரணியன் கூற்றை மறுத்து முடிவாகப் பிரகலாதன், 'உன்னுடைய நன்மை கருதி "ஓம் நமோ நாராயணுய" என்றேன்' என்கிருன்.

இதனுல் ஏற்படப் போகும் சர்வாதிகார கோபம் பிள்ளைப் பாசத்தைக் கொன்று விடுகிறது. பிள்ளையையே கொலை செய்து விட வேண்டும் என்பதாகவும் இரணியனுள்ளத்தைத் தூண்டி விடுகிறது.

வேதாந்த விவகாரம்

அத்தகைய கோபத்தை ஜொலிக்கச் செய்த பிரகலாதன் வார்த்தை தான் என்ன! ஒரு பெரிய வேதாந்த விவகாரத்தில் அல்லவா பிரகலாதன் இறங்கி விடுவதாகத் தோன்றுகிறது!

இருபத்திரண்டு கவிகளில் இந்த விவகாரத்தை நடத்துகிருன் இச் சிறு பிள்ளை. ஓதாதுணர்ந்தவன் பண்டித விவகாரத்தில் ஈடுபடுகிருன்.

வித்தின்றி விளைவில்லை என்ற சாதாரண லௌகிக வாக்கியத்தைத் துணையாகக் கொண்டு, ஆதிமூலமாகிய கடவுள் இந்த உலகத்திற்கு ஆதி காரணப் பொருளாக இருக்க வேண்டும் என்கிருன். 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்பது போல இக் காரண காரிய முறையை மீறி ஒருவன் தானே இறைவனுகி விட்டது போல் வலிமையே துணையாகக் காரியங்களைத் தன் இஷ்டப் படியே செய்து கொண்டு போக முடியாது என்கிருன்.

அதிகார இரகசியம்
(கடலும் மீனும்)

கடவுள் உலகங்களையெல்லாம் படைத்துக் காக்கின்ற அந்த அதிகார இரகசியத்தை இந்தச் சர்வாதிகாரிக்குக் காட்ட முயல்கிருன் சிறுவன்:

தன்னுளே உலகங்கள்
எவையும் தந்(து), அவை

தன்னுளே நின்று, தான்
அவற்றுள் தங்குவான்,
பின்னிலன், முன்னிலன்,
ஒருவன், பேர்கிலன்
தொன்னிலை ஒருவரால்
துணியற் பாலதோ?

[நின்று - (இங்கே) நிற்கச் செய்து. பேர்கிலன் - மாறுபடாதவன். தொன்னிலை - பழமையான நிலை. துணியற் பாலதோ - துணிந்து சொல்லக் கூடியதோ.]

இந்த இரகசியத்தை ஒருவாறு அறிவைக் கொண்டு அறிந்து கொள்ள முயன்றாலும், 'கடவுள் எங்கே இருக்கிறான்! இருக்கிறானா, இல்லையா!' என்ற கேள்விகளுக்கு இடமே இல்லையாம். கடவுளுக்குள்ளே உலகங்கள் இயங்குகின்றன — மீன்கள் கடலில் இயங்குவது போலே. தெய்வ சக்திக்குள்ளே இயங்குவதுதான் எந்தச் சர்வாதிகார சக்தியும்!

'கடல் எங்கே இருக்கிறது!' என்று கேட்டதாம் ஒரு மீன். 'கடல் என்ற ஒன்று இருக்கிறதா, என்ன!' என்று அதிசயமாய்க் கேட்டதாம் வேறொரு மீன். இவ்வளவுதான் நாத்திக ஆர்ப்பாட்டங்களெல்லாம் என்பது பிரகலாத சித்தாந்தம்.

தன்னுள்ளே உலகம் தந்தவன், அதைத் தன்னுள்ளே நின்று இயங்கச் செய்ததுடன், தானும் அந்த உலகத்திற்குள் அந்தர்யாமியாகத் தங்கி நீங்காது வாழ்கின்றானாம். இத்தகைய கடவுளைப் 'பின்னும் முன்னும் இல்லாதவன்' என்கிறான் பிரகலாதன்.

இவனை 'இல்லை'யென்று சொல்லிவிட்டால் தான் என்ன! அந்த நாத்திகமும் — அந்த இன்மைகளும் — கடவுளை வருணிக்கும் முயற்சிதான்! தன்னிலை மாறுபடாத இக் கடவுளின் தொன்னிலையைத் துணிந்து சொல்லக் கூடியவர் யார்! ஆஸ்திகர்தாம் உணர்ந்து துணிந்து சொல்லக் கூடியவரா!

இந்தக் கடவுள் இரகசியத்தை—இந்தக் கடவுளுண்மையைக் — கண்டவரில்லை, தேவரும் முனிவரும் கூட.

களவையார் அறிகுவார்?
மெய்ம்மை கண்டிலார்

[களவு - கள்ளத்தனம்: (இங்கே) மாயத் தன்மை.]
என்கிறான் பிரகலாதன்.

தேவரும் முனிவரும்
உணரத் தேயுமோ?

[உணரத் தேயுமோ - உணர்ந்து கொள்ளுமாறு அவ்வளவு தூரம் குறைந்து போகுமோ.]
என்றும் சொல்லுகிறான்.

தேவரும் முனிவரும் கூட உணர முடியாதென்றால், சாதாரண மக்கள் கடவுளைக் கண்டு கொள்ள முடியவில்லையே என்று கூறுவதில் என்ன பொருள் இருக்க முடியும்! என்றாலும், 'காணவில்லை, காணவில்லை' என்று சொல்லுகிற நாத்திகர்களின் அந்தக் கண்களிலும் கடவுள் இருக்கத்தான் செய்கிறானாம்.

கண்ணிலே கண்ணன்

எப்படியிருக்கிறான்!

கண்ணினும் கரந்துளன்

[கரந்துளன் - மறைந்துள்ளான்.]
என்கிறான் பிரகலாதன்.

கண்ணுக்குள்ளே கண்ணன் இருக்கிறான்; கண் தான் பார்க்கவில்லையாம். எனினும் கடவுளைக் கண்டவர்கள் உண்டு; கண்டு காட்டுவோருமுண்டு. அத்தகைய ஞானிகளுடைய உள்ளத்தில் உணர்வாக மறைந்திருந்து தான் கடவுள் தன்னை அவர்களுக்குக் காட்டிக் கொடுக்கிறானாம்.

இவ்விதமாக அவன் காட்டத் தாம் கண்டு கொண்ட உண்மையைத் தான் திருமங்கையாழ்வார்,

காவிபோல் வண்ணர்
வந்(து)என் கண்ணுளே
தோன்றினாரே!

[காவி - நீலமலர்.]
என்கிறார்.

ஞானியர் கண்ணிலும் உள்நிறைந்த உணர்விலும் தான் இருக்கிறானா அந்த ஞான சொரூபி! மண்ணிலும் இருக்கிறானாம்; விண்ணிலும் இருக்கிறானாம்.

நீர், நெருப்பு, காற்று என்னும் பூதங்களிலும் அவன் மறைந்திருப்பதால் தான், அந்த அந்தக் காரியம் அப்படி அப்படி நடைபெறுகிறதாம். அந்த அந்த அதிதேவதைகள் அந்தர்யாமியான ஞான சொரூபிக்கு அஞ்சிப் பணி புரியக் காண்கிறோம் என்பது பிரகலாதன் குறிப்பு.

கடவுளும் வாழ்வும்

இக் கடவுளை,

எண்ணினும் நெடியவன்;
ஒருவன் எண்ணிலான்





[எண்ணினும் – எண்ணங்களுக்கும் எட்டாமல் கடந்திருப்பவன். எண்ணிலான் – ஒருவரையறைக்கும் உட்படாதவன்.]

என்கிறான் பிரகலாதன்.

எண்ணத்தைக் கடந்து நின்றாலும் எண்ணத்தில் கலந்தும் இருக்கிறானும். எண்ணத்தில் மட்டுமா! — செயலிலும் சொல்லிலும் சேர்ந்திருக்கிறானும்.

புலன்களிலும் பொருந்தி யுள்ளான் உணர்விலுக்கும் எட்டாத ஒருவன் என்கிறான். இப்படி யாவும் இறைவனது சொரூபம் தான். அவனுக்கு அடக்கம் தான் என்பதை உணர்ந்து ஒழுகுவோனே நல்லறிஞன் என்பது குறிப்பு.

நமது வாழ்க்கையை நன்கு வாழ்வதற்குக் கடவுள் நிலை பற்றிய உணர்வு அவசியமானது :

உள்ளுளன்,
புறத்துளன்,
ஒன்றும்
நண்ணலான்

[நண்ணலான்–தொடாப் பெருதவனாக இருக்கிறான்.)

என்று கடவுள் நிலையை உணர்ந்து கொள்வோர். தாமரை இலைத் தண்ணீர் போலத் தாங்களும் அதிகமான பற்று இல்லாமல் வாழ்க்கை நடத்தக் கூடுமல்லவா!

மருளும் அருளும்

எத்தகைய அறிவாளிக்கும் வல்லாள கண்டனுக்கும் கடவுளுடைய சொரூபம் மயக்கத்தை விளைவிக்கக் கூடியதுதான். மறைகளும் மருண்டு போகின்றனவே!

தள்ளரு மறைகளும்
மருளும் தன்மையான்

[தள்ளரு – தள்ள முடியாத; பிரமாணம் அல்லவென்று ஒதுக்கிவிட முடியாத.]

என்பது பிரகலாதன் கூற்று.

'குறவரும் மருளும் மலை' என்று கூறுவதுண்டு. அந்த மலையில் வசிக்கிறவன்தான் அந்த மலைக் குறவன். அவனையும் மயங்கச் செய்கிறது அந்த மலையென்றால், அதன் மாட்சியை, வளங்களை, அழகுகளை, மேடு பள்ளங்களை, அபாயங்களை, ஏற முடியாத சிகரங்களை, இறங்க முடியாத பள்ளத்தாக்குகளை, நெருங்க முடியாத வியப்புக்களை, பிரிய முடியாத வசீகரங்களை எல்லாம் நினைத்துப் பார்க்கிறோமல்லவா!

நினைப்பிற்கும் எட்டாத தெய்வ மாட்சி தெய்வ ஆட்சி, தெய்வ சௌந்தரியம், கொடுமை, தெய்வ வசீகரம், எளிமை, பெருமை, கொடுமை, வலிமை, மென்மை, அருள் எல்லாம் மறைகளும் மருளும் நிலையில் உள்ளன என்பது குறிப்பு.

இப்படி 'மறைகளும் மருளும்' தெய்வ மலை இரணிய வேட்டைக்கு எளிதாகுமா!

ஓமெனும் ஓரெழுத்(து)
அதனின் உள்ளுயி –
ராம் அவன், அறிவினுக்(கு)
அறிவும் ஆயினான்

என்று வேதப் பொருளை விரித்துரைப்ப தெல்லாம் இரணியனை வசீகரிக்கக் கூடுமா!

இரணியனுடைய மருள், உபதேசம் செய்கிறவனுக்கே ஆபத்தாகவும் முடியக் கூடுமே! ஆனால் அருள் பெற்ற பிரகலாதனை மருள் என்ன செய்யக் கூடும்!

முடிவுரை

பிரகலாத வேதாந்தம் சமயவாதிகளுக்கிடையே ஒருவகைச் சமரசம் காண்பது போல் முற்றுப் பெறுகின்றது:

காலையில் நறுமலர்
ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை
சமய வாதியர்
சூலையின் திருக்கலால்
சொல்லு வார்க்கெலாம்
வேலையும் திரையும் போல்
வேறு பாடிலான்.

[காலையில் – (இங்கே) காலத்தில் மலர்ந்த. ஒன்றி – ஒரு சேர. மலர் புரை – மலர்களை ஒத்த. குலை – குடைந்து குடைந்து செய்யும் விவாதம். திருக்கு – மாறுபாடு. வேலை – சமுத்திரம். திரை – அலை.]

பலவேறு சமயக் கொள்கைகளும், காலத்தில் மலர்ந்த பலவேறு மலர்கள் நெருங்கிப் பொருந்திய ஒரு மாலையைப் பரம்பொருளுக்குச் சூட்டுகின்றனவாம். சமயவாதிகள் வேத சாத்திரங்களையும் பலவேறு நூல்களையும் குடைந்து குடைந்து செய்யும் விவாதங்கள் மாறுபாடாய்த் தோன்றக் கூடும். எனினும் எல்லாம் ஒரே மாலையில் பல்வகை மணம் வீசும் பன்னிற மலர்களே!

கடலில் அலைகள் பலவாக எழுந்து கோஷிப்பது போலத்தான் சமயவாத கோஷங்களும். அலைகளெல்லாம் கடலில் அடங்குவதுபோல் சமயப் பொருள்களெல்லாம் பரம்பொருளாகிய கடலில் அடங்குகின்றன. இது பிரகலாத சித்தாந்தம் – பிரகலாத ஸ்ரீவைஷ்ணவம்.

இவ்விதமாகச் சமய உண்மையையும் கடவுளுண்மையையும் உணர்ந்து சமாதான வாழ்க்கை நடத்துவது வாழ்வு என்கிறான் பிரகலாதன்.

இறைவனை இகழ்வதும், உயர்ந்த லட்சியங்களைப் பழிப்பதும் அழிவிற்கே காரணமாகும் என்கிறான்.

'இன்னதோர் தன்மையன்
இகழ்வுற்(று), எய்திய
நன்னெடுஞ் செல்வமும்
நாளும் நாமற
மன்னுயிர் இழத்திஎன்(று)
இறைஞ்சி வாழ்த்தினேன்
சொன்னவன் நாமம்'என்(று)
உணரச் சொல்லினான்.

[இன்னதோர் தன்மையன்–இப்படிப்பட்ட ஒப்பற்ற தன்மையுடைய கடவுளை. இகழ்வுற்று – நீ இகழ்ந்து. எய்திய – ஏற்கெனவே நீ பெற்றிருக்கும். நன்னெடுஞ் செல்வமும் –சிறந்த பெருஞ் செல்வங்களும். நாளும் – வாழ்நாளும். நாமற – நாமத்தோடு அல்லது பெயரோடு அற்றுப் போக. மன் உயிர் இழத்தி – நிலைபெற்ற உயிரை இழக்கின்றாய். இறைஞ்சி – துதித்து. சொன்னவன் நாமம் – நீ சொன்ன கடவுளுடைய நாராயண நாமத்தை.]

ஓதாதுணர்ந்த குழந்தை யுள்ளத்திலிருந்து பிறக்கும் ஞானப் பொழிவாகத் தோன்றவில்லை இப் பேச்சு!

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

10. ஞானச் செவிடு!

பிரகலாதனுடைய பேச்சு, மலர்களைத் தூவுவது போலத் தான் வந்து விழுகிறது செவித்தலத்திலே. ஆனால் ஏன் இப்படி ஆலகால விஷம் பொங்கி வரவேண்டும், இரணியன் உள்ளத்திலிருந்து!

இரணிய கோபம்

சூரியனும் வானுலகமும் சுழல்வது போலக் காண்கின்றன. பூமி சுற்றுவதும் புலனாகின்றது. என்ன அதிசயம்! கொடிய தீ; அத் தீயிலிருந்து புகைக் கொடிகள் – இரத்தமும் வெளிப்படுகிறது!

இந்த இரணிய கோபத்திலே பொசுங்கிப் போகின்றன பக்தி தூவிய ஞான மலர்களெல்லாம். இத்தகைய கோபத்தின் செய்யுளுருவத்தைப் பார்க்கலாம்:

எதிரில் நின்றவன்
இவையுரைத் திடுதலும்,
எவ்வுல கமும்அஞ்ச,
முதிரும் வெங்கதம்
மொழிகொடு மூண்டது,
முதுகடல்-கடுஏய்ப்ப ;
கதிரும் வானமும்
சுழன்றன; நெடுநிலம்
கம்பித்த; கனகன்கண்
உதிரம் கான்றன ;
தோன்றின புகைக்கொடி;
உமிழ்ந்தது கொடுந்தீயே!

[நின்றவன்-நின்றவனான பிரகலாதன். இவை உரைத்திடுதலும்-இந்த வார்த்தைகளைச் சொன்னவுடனே. முதிரும் வெங்கதம்-மிக்க கொடுங் கோபம். மொழிகொடு-தனக்குரிய சொற்களையும் உடன் கொண்டு. முதுகடல் கடு ஏய்ப்ப-பழமையான பாற்கடலி லிருந்துதோன்றிய ஆலகால விஷம் போல. கதிரும்-சூரியன் முதலிய ஜோதிகளும். கம்பித்த-அசையலாயின. கனகன் கண்-இரணியனுடைய கண்கள். உதிரம் கான்றன-இரத்தம் கக்கின. உமிழ்ந்தது-(இங்கே) சொரியப்பட்டது.]

இரணியனது கொடுங் கோபம் அதற்குரிய மொழிகளுடன் ஜொலிக்கிறதென்று கவிஞன் கூறியிருப்பினும், இக் கோபம் தனக்குரிய செய்யுள் வடிவத்துடன் ஜொலிக்கவில்லை! ராம கோபம், ராவண கோபம் முதலான கோபங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தனக்குரிய கோபத்தையும் வெளியிடத் தெரியவில்லையோ இரணியனுக்கு! — என்று கூடத் தோன்றுகிறது.

பாலகாண்டத்திலுள்ள விசுவாமித்திர கோபத்தோடு இந்த இரணிய கோபத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், பாலகாண்டம் தோன்றுவதற்கும் முன்பு இரணியன் கதைதோன்றியிருக்கக்கூடும் என்பதற்கே எனக்குச் சான்று கிடைக்கிறது.

கோபக் குரல் எங்கே?

இனி, தனக்குரிய மொழிகளையும் கொண்டு வெளிப்பட்டது கொடுங் கோபம் என்ற கவிஞன் கூற்றுக்கு இணங்க, அந்தக் கொடுங் கோப மொழிகளாவது பொருத்தமாய்ப் புறப்படுகின்றனவா என்பதைப் பார்க்கலாம். கொலைத் தொழிலில் வல்லவரான அசுரர்களை நோக்கிப் பேசுகிறான்.

தன் கோபத்திற்குப் போதுமான காரணம் இருக்கிறது என்பதையும் இரணியன் குறிப்பிட்டு, 'ஆகலால் கொன்று விடுங்கள்' என்கிறான் :

'வேறும் என்னொடு
தரும்பகை பிறி(து)இனி
வேண்டல்;என் வினையத்தால்
ஊறி என்னுளே
உதித்தது; குறிப்(பு)இனி
உணர்குவ(து) உளதன்றால்;
ஈறில் என்பெரும்
பகைஞனுக்(கு) அன்புசால்
அடியன்யான் என்கின்றான் ;
கோறி' என்றனன்,
என்றலும், பற்றினர்
கூற்றினும் கொலைவல்லார்.

[வேறும்-வேறாக. பிறிது-மற்றொன்றை. வேண்டல்-வேண்டுவேன் அல்லேன். என் வினையத்தால்-என்னுடைய தீவினையினால். உணர்குவது உளதன்று-அறிய வேண்டியது இல்லை. ஈறில்-முடிவில்லாத. அன்புசால் அடியன் - அன்புமிக்க தொண்டன். கோறி - கொன்று விடுங்கள். கூற்றினும்-யமனைக் காட்டிலும்.]

'கொல்லு' என்று ஒரு கொலையாளிக்குக் கட்டளையிடவே, பல கொலையாளிகள் வந்து பற்றிக் கொள்கிறார்களாம் பிரகலாதனை. 'ஈறில் என்பெரும் பகைஞன்' என்று திருமாலைக் குறிப்பிடுகிறவன், தன்னை ஈறில்லாதவன், அழிவில்லாதவன் என்றுதான் எண்ணிப் பேசுகிறான். எனினும் தன்னை யறியாமலே தன் பெரும் பகைவன் ஈறில்லாதவன் என்று ஒப்புக் கொள்வது போல அமைந்து விடுகிறது வாக்கியப் போக்கு.



'அந்தப் பெரும் பகைவனுக்கு அடியேன், அடியார்க்கும் அடியேன்!' என்று சொல்லுகிற பிள்ளை யல்லவா பெரும் பெரும் பகைவன்! புறப் பகையைக் காட்டிலும் அகப்பகை யன்றோ மிகக் கொடிது!

'அடடா, பகை எங்கேயோ போய் ஒளித்துக் கொண்டது; அல்லது எந்தக் கடலிலோ போய் உறங்கிக் கொண்டிருக்கிறது என்றல்லவா எண்ணியிருந்தோம்! அது நம்மை அறியாமல் நமக்குள்ளே ஊறி உதித்து விட்டதே!' என்று திகைத்திருக்கும் நிலையில், 'இது என் தீவினை!' என்கிறான், நல்வினை தீவினைகளில் நம்பிக்கை இல்லாத இரணியன்.

'அவரை போட்டால் துவரை முளைக்குமா!' என்பார்கள். அசுர வித்தில் இப்படியும் ஒரு விளைவா! 'தீவினை, தீவினை' என்கிறார்களே, அதுதானோ! இப்போது இரணியன் மன நிலை இது.

இப்படி யெல்லாம் விரிவுரை சொல்லும்படி இந்தச் செய்யுள் அமைந்திருந்தாலும், இரணியனுடைய கொடுங் கோபத் தீயிலிருந்து பறக்கும் சுடர்களாக வந்து விழுந்து சுடவில்லை வார்த்தைகள்! ராட்சஸத் தோரணை இல்லாதவன் இரணிய வேஷம் போட்டுக் கொண்டு அலறப் பார்க்கும் கதைதான்!

கொலையாளிகளின் கண்களிலும் கோபத் தீ ஜொலிக்கத் தான் செய்கிறது. ஒரு யானைக் குட்டியை ஆண் சிங்கங்கள் சூழ்ந்து கொண்டது போலத் தான் பிள்ளையைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

குன்று போல் உயர்ந்துள்ள அரண்மனை வாசலின் பெரு வெளியிலே சிறுவனை இழுத்துக் கொண்டு வருகிறார்கள். 'உயிருடனே தின்று விடுவோம்!' என்று இடி போலப் பயங்கரமாகக் கொக்கரிக்கிறார்கள். ஆயிரக் கணக்கான வாளாயுதங்களும், மழுக்களும் பாய்கின்றன. ஆனால் சப்த ஜாலங்களில் கோபக் குரல் குமுறவில்லை!

அதிசயக் குரலும் இல்லை!

கொலைஞர் எறிந்த படைக்கலங்கள் பிள்ளையை ஒன்றும் செய்யவில்லை

யென்றால், அந்த அதிசயம் கண்டாவது திகைத்துப் போக வேண்டாமா! அது தான் இல்லை. கொலை வெறி அறிவைப் புதைத்து விடுகிறது.

வேல் ஈட்டி முதலியவற்றை வீசி எறிகிறார்கள். அம்புகளை எய்கிறார்கள். சில படைக்கலங்களால் தாக்குகிறார்கள், குத்துகிறார்கள். வேறு படைக்கலங்களைக் கொண்டு பிளந்தெறியப் பார்க்கிறார்கள். எல்லாம் தவிடு பொடியாகித் தகர்ந்து போகின்றனவாம்.

சொறிந்த தன்மையும்
செய்தில ஆயின

—அதாவது தினவு சொறிந்த பாடும் இல்லையாம்.

இதற்குப் பிரகலாதன் செய்த காரியம் தான் என்ன! இவன் திறமை யொன்றும் இல்லையாம்: பகவந்நாம மகிமைதான்! இறைவன் திருவடிகளைத் தியானித்த வண்ணம் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். வேறு படைக்கலம் தான் இவனுக்கு இல்லையே! ஏன், உள்ளத்திலும் எதிர்ப்பு இல்லையாம்.

கொலைஞர்கள் இரணியனிடம் போய், 'உன் பிள்ளை மேனிக்குச் சேதம் சிறிதும் இல்லை; சேதம் நம் கொலைக் கருவிகளுக்குத் தான்' என்று செய்தி சொல்லியும் இரணியன் தான் அதிசயப்படுகிறானா! 'பிள்ளையைத் தள்ளு நெருப்பிலே!' என்று உத்தரவு போடுகிறான்.

ஒரு பெரிய குழி தோண்டுகிறார்கள். விறகுகளைக் குன்று போல் அடுக்குகிறார்கள். குடங்குடமாய் எண்ணெய், வெண்ணெய், நெய் ஆகியவற்றைக் கொட்டுகிறார்கள். தீ வானத்தை நோக்கி எழுந்து ஜொலிக்கிறது. ஆனால் ஹரிநாமத்தை உச்சரிக்கும் பிள்ளைக்கு, ஆபத்து ஏது! 'குளிர்ந்தது சுடு தீயே!' என்கிறான் கவிஞன்.

உபமான அதிசயம்

எப்படிக் குளிர்ந்தது! பனி போலக் குளிர்ந்தது என்பது போல் ஏதாவது ஒரு உபமானம் சொல்லப்படவில்லை. அனுமனுடைய வாலில் துணி சுற்றி, நெய் ஊற்றி நெருப்பு வைத்ததும் பிராட்டியின் அனுக்ரக வார்த்தையால் வாலில் தீ குளிர்ந்த அந்தக் குளிர்ச்சி, இந்தக் குளிர்ச்சிக்கு உபமானமாகிறது.

இந்த உபமானத்தையும் உபமேயத்தையும் பாருங்கள்:



கால வெங்கனல்
  கதுவிய காலையில்,
  கற்புடை யவள்சொற்ற
சீல நல்லுரை
  சீதமிக்(கு) அடுந்தலின்,
  கிழியொடு நெய்தீற்றி
ஆலம் அன்னவர்
  கரங்களால் வயங்கெரி
  மடுத்தலின் அனுமன் தன்
கூலம் ஆமென
  என்புறக் குளிர்ந்த(து) அக்
  குருமணித் திருமேனி.

[காலவெங்கனல் – பிரளய கால நெருப்பைப் போன்ற கொடியநெருப்பு. கதுவிய காலையில் – பற்றி யெழுந்த காலத்தில். கற்புடையவள் – (இங்கே) சீதாபிராட்டி. சொற்ற – சொன்ன. சீல நல்லுரை – சீலம் தழுவிய நல்ல வார்த்தையினால், சீதம் மிக்கு அடுந்தலின் – குளிர்ச்சி மிகுதியாக உண்டானதால். கூலம் – வால். என்புற – எலும்பளவும். குருமணித் திருமேனி – சிறந்த இரத்தினம் போன்ற பிள்ளையின் அருமைத் திருமேனி.]

லங்கா தகனத்திற்கு முன் ராமதூதன் வாலில் ராவணன் ஆணையால் அரக்கர்கள் நெருப்பு வைத்த அந்தச் செயல், இரணியனது பிள்ளையை அசுரர்கள் நெருப்பில் தள்ளிய செயலுக்கு உபமானமாகிறது. செய்தியை அறிந்த பிராட்டியின் அனுக்கிரகம் திருநாம மகிமைக்கு உபமானமாகிறது. அந்தக் குளிர்ச்சி உபமானம்; இந்தக் குளிர்ச்சி உபமேயம். இத்தகைய உபமான உபமேய அமைப்பினால் நாம் தெரிந்து கொள்வதென்ன!

புராண வரலாற்றுப் போக்கிலே இரணியன் கதை இராவணன் கதைக்கு முற்பட்டது. எனவே இத்தகைய உபமான உபமேய அமைப்பைக் கொண்டு சுந்தர காண்டம் பாடிய பிறகே இரணியன் கதையைக் கம்பன் பாடியிருக்க வேண்டும் என்று துணியவும் கூடும்.

ஆனால் சுந்தர காண்டத்திலே இந்த நிகழ்ச்சியை வெளியிடும் பாக்களுடன் இந்த இரணியன் வதைப் படலச் செய்யுளை ஒப்பிட்டுப் பாருங்கள். முதிர்ச்சி பெறாத கவிதை எது; மூண்டெழுந்து ஜொலிக்கும் ஆவேசக் கவிதை எது என்பதைக் கம்பனுடன் சாதாரணப் பழக்கம் உள்ளவர்களும் தெரிந்து கொள்ளலாம்.

கொழுந்து விட்டு எரியத்தான் செய்கிறது நெருப்பு. ஆனால் அந்தச் சத்தம் இப்போது 'ஹரி, ஹரி' என்றுதானே முழங்குகிறது! தீயின் செந்நிறப் போர்வைக்குள் நின்று தொழுகின்றவன் முழக்கும் ஹரிநாமம் தான்.

கம்பன் முத்திரை

அழுது நிற்கின்றார் தேவர் வான வீதியில். தொழுது நிற்கின்றான் பிரகலாதன் சுடு தீயினிடையே. கொலைக் கருவி கொல்லவில்லை! தீக்கும் சுடத் தெரியவில்லை யென்றால் என் இனிச் செய்வது? அழவும் தெரியவில்லை, தொழவும் தெரியவில்லை அசுரர்களுக்கு!

ஆனால் இரணியனுக்கு இன்னும் கர்ஜிக்கத் தெரிகிறது.

'கட்டித் தீயையும்
  கடுஞ்சிறை இடுமின்! அக்
  கள்வனைக் கவர்ந்துண்ண
எட்டுப் பாம்பையும்
  விடுமின்கள்!' என்றனன்
  எரி எழு தறுகண்ணன்.

[எரி எழு – கோப நெருப்பு ஜொலிக்கின்ற. தறுகண்ணன் – அஞ்சாத நோக்கையுடைய இரணியன்.]

இங்கே கவிஞன் முத்திரையும் நமக்கு நன்றாகத் தெரிகிறது.

அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தட்சகன், பத்மன், மகாபத்மன், வாசுகி என்னும் அஷ்ட மாநாகங்களும் இரணியன் ஆணையின் வண்ணம் விஷாக்கினி கக்கும் வாய் திறந்து பிரகலாதனை நோக்கி வருகின்றன:

சினம் தம் மீக்கொளக்
  கடித்தன; துடித்திலன்
  திருப்பெயர் மறவாதான்.

[சினம் தம் மீக்கொள – கோபம் தம்மை மிஞ்சி அதிகப்பட.]

விஷப்பற்கள் ஒடிந்து உதிர்ந்து போகின்றனவாம். விஷம் ஊறுவதற்கு மாறாக அமிர்தம் ஊறி ஒழுகுகின்றதாம்.

ஆத்மாவைத் தீயால் சுட முடியாது, கொலைக் கருவிகளால் கொல்ல முடியாது என்றெல்லாம் பகவத்கீதை முதலான நூல்கள் ஞான முரசு கொட்டுகிறதல்லவா! அதே ஞான முரசு முழங்குகிறது பிரகலாத சரித்திரத்திலும்—முக்கியமாகப் பிரகலாதனை இரணியன் ஹிம்சிக்கும் பகுதியிலே.

ஆனால் முழுச் செவிடன்றோ அஞ்ஞானம்! 'அதோ முரசு மீது கோலை வைத்து வைத்து எடுக்கிறானே, எப்போது முழக்கப் போகிறானோ!' என்னும் செவிடன்.